Annual Subscription Rs. 80/-
Price Rs. 7/-

# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 22 இதழ் - 5 மே 2009




## பன்னிரண்டாவது வேனிற்கால
## வேதாகம முகாம் மே 4,5,6 - 2009

**கிறிஸ்துவின் சபை**
காங்கயம் - 638 701
தமிழ்நாடு, இந்தியா.
✆ 04257 - 230030, 230603 ;98427 - 30382, 99655 - 30385
E-mail : kangayamcofc@eth.net

பன்னிரண்டாவது வேனிற்கால
வேதாகம முகாமில் நற்செய்திக்குக் கீழ்ப்படிந்தவர்களோடு
சகோதரி. ரேச்சல் நாயகம்

Racheal with those who obeyed



## ஆசானின் அறிவுரையில் :


1. ஆசிரியர் உரை - 1
2. நற்செய்திப்பணி - 9
3. பெண்கள் பகுதி - 13
4. வாலிபர் பகுதி - 16
5. சிறுவர் பகுதி - 20
6. விசுவாசத்தின் அடிப்படைகள் - 22
7. கிறிஸ்துவைப் பின்பற்ற நாம் எடுக்க வேண்டிய சிலுவை - 27
8. இரத்த சாட்சிகள் - 30

# THIRUMARAI AASAAN

S. Rajanayagam
Editor

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 22 MAY - 2009 Issue - 5


ஆசிரியர் உரை

## இரண்டுக்கும் போதும்

"இரண்டுக்கும் போதும் என்பதைப் படிக்கும்போதே நமக்குள் எந்த இரண்டுக்கும் எது போதும் என்ற கேள்வி தானாக எழும். நன்மைக்கும், தீமைக்குமா அல்லது வாழ்வுக்கும் தாழ்வுக்குமா? அல்லது சுகத்திற்கும், சுகவீனத்திற்குமா அல்லது மகிழ்ச்சிக்கும், துக்கத்திற்குமா அல்லது பிழைப்பதற்கும், மரிப்பதற்குமா அல்லது வேறு எந்த இரண்டுக்கும்தான் என்று இயல்பாகவே நினைக்கத் தோன்றும். நான் பட்டியலிட்டிருக்கும் இந்த காரியங்களெல்லாம் இப்பூமியோடு சம்மந்தப்பட்ட காரியங்களாக இருப்பதால் நான் சொல்ல வரும் இரண்டும் இவைகளோடு சம்மந்தப்பட்டவையல்ல. ஏனெனில், இப்பூமியோடு முடிந்துபோகும் காரியங்களைக் குறித்து பேசுவதற்காக நான் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டு (எபே 1:4) சுவிஷேசத்தினாலே அழைக்கப்படவில்லை. (2 தெச 2:14) அப்படியானால், அந்த இரண்டு எது என்றும் அவ்விரண்டுக்கும் போதுமானது எதுதான் என்றும் நீங்கள் கேட்கக்கூடும். அதைத் தெரிந்துகொள்ள தொடர்ந்து படிப்போம்.

கடந்த சில காலங்களுக்கு முன்னான எனது உரையில் இப்பூமியில் ஒருவன் பெலத்தோடு வாழ்வதற்கு எது போதும் என்று எழுதியிருந்தேன். அமரிக்கையும், தேவன் மீது வைக்கும் நம்பிக்கையும் ஆகிய இரண்டு கைகளும் போதும் என்று வேத வசனங்களின் ஆதாரங்களோடு சொன்னேன். அது உங்களுடைய வாழ்வுக்கு கைக்கொடுத்ததென்றும் தெரிந்து கொண்டேன். ஆனால், தேவன் மீது நம்பிக்கை வைக்கும் ஒருவன் இப்பூவுலகில் சுகமாக வாழ்வது எப்படி என்பதில் மாத்திரம் நாட்டம் உள்ளவனாக இருந்தால், தேவன் அதில் பிரியப்படுவாரா? நிச்சயமாக மாட்டார். ஏனெனில், இது குறித்து தனது நாசனாகிய அப்போஸ்தலன் பவுலைக்கொண்டு மிகத் திட்டமாக

தனது விருப்பத்தை வெளிப்படுத்தியுள்ளார். கவனியுங்கள். "இம்மைக்காக மாத்திரம், நாம் கிறிஸ்துவின் மேல் நம்பிக்கையுள்ளவர்களாயிருந்தால், எல்லா மனுஷரைப் பார்க்கிலும் பரிதபிக்கப்படத் தக்கவர்களாயிருப்போம் என்று" (கொரி I 15:19).

இப்பூமியின் வாழ்வுக்கு அவர்மீது நம்பிக்கை வைக்கும் நாம், அந்த நம்பிக்கையே நம்மை பரிதவிக்கவும் செய்துவிடும் என்பதை அறியும்போது நமக்கு பயமாகத்தானே இருக்கிறது. இது குறித்து நாம் கொஞ்சமாகிலும் யோசிக்க வேண்டியது அவசியம் தானே. மேலே உள்ள வசனம், நம்முடைய நம்பிக்கை இம்மைக்காக மாத்திரம் இருக்கக்கூடாது என்று வலியுறுத்திச் சொல்கிறது. அப்படியானால், நம்முடைய நம்பிக்கை எதற்கும் சேர்த்து இருக்கவேண்டும்? சொல்லுங்கள். ஆம், இம்மைக்கும், மறுமைக்கும் சேர்த்தே இருக்கவேண்டும். இக்கருத்தை நாம் மேலும் விளங்கிக் கொள்வதற்காக இதே பவுலைக் கொண்டு தேவன் தந்திருக்கும் இன்னுமொரு வசனத்தையும் கவனியுங்கள். சரீர முயற்சி அற்ப பிரயோஜனமுள்ளது; தேவ பக்தியானது இந்த ஜீவனுக்கும் இதற்குப் பின்வரும் ஜீவனுக்கும் வாக்குத்தத்தமுள்ளதாகையால் எல்லாவற்றிலும் பிரயோஜனமுள்ளது (1 தீமோ 4:8) என்று தேவன் மீது நாம் வைக்கும் நம்பிக்கை இந்த ஜீவனுக்கும் பயன்படுகிறது என்று சொல்லும் அதே தேவனுடைய வார்த்தை, தேவபக்தியானது இந்த ஜீவனுக்கும் இனிவரும் ஜீவனுக்கும் பிரயோஜனமுள்ளதாய் இருக்கிறதென்று கூறுகிறபடியால், இரண்டுக்கும் போதுமானதாக இருப்பது தேவபக்திதானென்று நாம் தைரியமாகச் சொல்ல முடியும். இப்பொழுது தேவபக்தி இரண்டுக்கும் போதும் என்று சொல்லப்பட்டிருக்கும் வசனத்தின் பின்னணி பற்றி சிறிது தெரிந்து கொள்வோம்.

இந்த ஜீவனுக்கும், இனிவரும் ஜீவனுக்கும் தேவபக்தி போதும் என்ற கருத்து இடம் பெற்றிருக்கும் நூல் அப்போஸ்தலனாகிய பவுலாலே தனது அந்திய காலத்தில் விசுவாசத்தால் தான் பெற்றெடுத்த உத்தம குமாரனும், லீஸ்திரா பட்டணத்தைச் சேர்ந்தவனுமான தீமோத்தேயுவுக்கு எழுதப்பட்டுள்ள முதலாவது நிருபமாகும். அப்போஸ்தலன் பவுலாலே எழுதப்பட்ட கடைசி மூன்று நூல்களுள் இதுவும் ஒன்று.

அப்போஸ்தலன் பவுல், கிறிஸ்துவின் சுவிசேஷத்தை உலகெங்கும் எடுத்துச் சென்ற போது எதிர்வந்த எல்லாவற்றையும் துச்சமென மதித்து, மிகுந்த வைராக்கியத்தோடு ஊழியம் செய்தார் என்பது நாமறிந்ததே. சிறையில் தள்ளப்படும் அளவுக்கு அவருக்கு எதிர்ப்பு இருந்ததென்பதும் நமக்குத் தெரியாததல்ல.

அப்படி அவர், முதன்முறையாக சிறையிலடைக்கப்பட்டு விடுதலையாக்கப்பட்டவுடன், தனது சீடப்பிள்ளையாகிய தீமோத்தேயுவைக் கூட அழைத்துக்கொண்டு எபேசு பட்டணத்துக்குச் சென்றார். அங்கிருந்த சபையில் தான் கண்ட காரியங்கள், தனக்கு கடுமையான கவலையை

ஏற்படுத்தினபடியால், தீமோத்தேயுவிடம் சில பொறுப்புகளை ஒப்படைத்து, அவனை எபேசுவிலேயே விட்டுவிட்டு தான் மட்டும் மக்கெதோனியாவிற்கு புறப்பட்டுவிடுகிறார். (1 தீமோ 1:3) பவுலடியாரின் கவலைக்கான காரணங்கள் குறைந்தது இரண்டு. 1) சபையில் எழும்பியிருந்த கள்ளப்போதகங்கள். 2) சபையின் பிற நடைமுறை ஒழுங்கு சம்பந்தப்பட்ட காரியங்கள். இங்கே தீமோத்தேயுவிடம் ஒப்படைக்கப்பட்ட பொறுப்பு மிகப்பெரியதும், அதிக நுட்பமானதாகவும் இருந்துள்ளது. ஆகவே, அப்பொறுப்புகளை தீமோத்தேயு சரியாக நிறைவேற்ற வேண்டுமானால், அவன் செயல்பாடுகள் அப்போஸ்தலனின் அங்கீகாரத்தைப் பெற்றிருக்கிறதென்பது அந்த சபைக்கும் தெரிந்திருக்க வேண்டிய அவசியமிருந்தது.

இந்தப் பின்னணியில்தான் அப்போஸ்தலனாகிய பவுல் மக்கெதோனியா போய்ச் சேர்ந்தவுடன், இந்த நிருபத்தை எழுதி அனுப்பியுள்ளார். ஒருவேளை, இதிலுள்ள காரியங்கள் அப்போதைய சூழ்நிலைக்கு மிகப் பொருத்தமானதாக இருந்திருந்தாலும் கூட இன்றளவும் சபையின் செயல்பாடுகளுக்கு ஏற்றதாகவும், ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் பிரயோஜனமுள்ளதாகவும் இருக்கிறது.

அடுத்து, நமது ஆராய்ச்சிக்கான வசனம் இடம் பெற்றிருக்கும் பகுதியை கவனித்தால் (2 தீமோ 4:6-16) ஒரு முக்கிய முயற்சியில் தன்னை ஈடுபடுத்தியிருக்கும் ஒரு இளைஞனின் நடத்தை எப்படியிருக்கவேண்டுமென்று சொல்லியிருக்கிறார். இங்கே தான், இம்மாதம் நமக்குப் பயன்படும் வசனமும் இடம் பெற்றுள்ளது. “சரீர முயற்சி அற்ப பிரயோஜனமுள்ளது; தேவபக்தியானது இந்த ஜீவனுக்கும், இதற்குப்பின் வரும் ஜீவனுக்கும் வாக்குத்தத்தமுள்ளதாகையால் எல்லாவற்றுக்கும் பிரயோஜனமுள்ளது” என்று. இப்பொழுது, இங்கே சொல்லப்பட்டிருக்கும் இரண்டு காரியங்கள் குறித்துப் பார்ப்போம்.

## I. சரீர முயற்சி - அற்ப பிரயோஜனமுள்ளது

முதலாவது, இந்த சரீரம் பற்றி பார்ப்போம். சங்கீதக்காரன் சொல்வதுபோல் சரீரமானது பிரமிக்கத்தக்க அதிசயமாய் தேவனால் உருவாக்கப்பட்டிருந்தாலும் (சங் 139:14). உருக்குலைந்து ஒருநாளிலே அழிந்துபோகும்படியாகவே அது வைக்கப்பட்டிருக்கிறது. ஆகவேதான், ஞானி சாலமோன் மண்ணான இந்த சரீரம் மீண்டும் மண்ணுக்கே போகும் என்று கூறுகிறார். (பிரசங்கி 12:7) அதுமாத்திரமல்ல, தேவ மனிதனாகிய மோசே சொல்வது போல. பூமியில் பிறக்கும் எல்லோரும் எழுபது வருஷமோ அல்லது பெலத்தின் மிகுதியால் எண்பது வருஷமோ தான். (சங் 90:10) முழுமையாக வாழ்வோம் என்பதற்கும் எந்த உத்திரவாதமுமில்லை.

மனிதனின் சரீர வாழ்வு குறித்து வேதாகமத்தின் பிற வசனங்களை நாம் கவனித்தால் அது எவ்வளவு நிலையற்றது என்பது நன்றாக விளங்கும். யோபுவில் பார்க்கும் போது, மனிதனின் சரீர வாழ்க்கை ஒரு கனவுக்கும், மேகத்திற்கும்

ஒப்பிடப்பட்டிருக்கிறது (யோபு 20 :8:7:9) புதிய ஏற்பாட்டில் யாக்கோபு ஆசிரியர் அதை புகைக்கும் (யாக் 4:14) பேதுரு ஆசிரியர் புல்லுக்கும் ஒப்பிடுகிறார் (1 பேதுரு 1:24) மனிதனுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் ஆயுசுநாட்கள் குறுகினதாகமாத்திரமல்லாமல், அது சஞ்சலம் நிறைந்தாகவும் உள்ளதென்று வசனம் சொல்கிறது (ஆதி 47:9 யோபு 14:1)

குறுகின ஆயுளும், நிறைந்த சஞ்சலமும் கொண்ட இந்த சரீரத்தைக் கொண்டு இந்த சரீர வாழ்வுக்காக எடுக்கப்படும் முயற்சிகள் கண்டிப்பாக அற்ப பிரயோஜனமுள்ளவைகளாகவே இருக்கமுடியும்.

இந்நூல் எழுதப்பட்டுள்ள மூல மொழியான கிரேக்கத்தில் "முயற்சி" என்ற வார்த்தைக்கு, ஒரு சிறப்பான பதம் பயன்படுத்தப்பட்டிருக்கிறது ஆம். அது ஒரு தேகப் பயிற்சி சாலையில் விடாமல் செய்யப்படும் ஒரு பயிற்சிக்குப் பயன்படும் வார்த்தை. அதாவது, ஒரு மனிதன், தன் சரீர வாழ்வுக்காக எப்படித்தான் முயற்சித்தாலும், எவ்வளவுதான் முயற்சித்தாலும், ஒரு வேளை இடைவிடாமல் முயற்சித்தாலும் அதன் பலன் அற்பமானதுதான் என்பது தான் இதன் பொருள். ஏனெனில், அவன் ஆயுள் அற்பமாக இருந்தாலும் அவன் சரீரத்தால் எடுக்கும் முயற்சியின் பலன் இந்த அற்ப ஆயுளுக்கு மாத்திரம் பயன்படுவதாலும், அப்பலன் அற்ப பிரயோஜனமுள்ளதென்ற பொருளைத் தான் பெறமுடியும்.

ஆம், நன்றாக சிந்தித்துப் பாருங்கள். விடா முயற்சியின் பலனாக பெறப்படும் பட்டங்களோ, அதனால் அடையும் மரியாதையோ அல்லது கடுமையான உழைப்பின் மூலம் சேர்க்கப்படும் சொத்துக்களோ அல்லது சொத்துக்கள் தரும் செல்வாக்கோ, செல்வாக்கு தரும் புகழோ, புகழ் தரும் சுகமோ அல்லது ஒருவனின் சரீர முயற்சியால் பெறப்படும் எதுவோ நமது மரணத்திற்குப்பின் நம்மோடு வருவதில்லை. அவ்வளவு ஏன், ஒருவனின் சரீர முயற்சியால் சேர்ப்பவைகள் அவன் சரீர வாழ்க்கை முழுவதும் அவனோடிருக்கும் என்பதற்கும் எந்த உத்திரவாதிமுமில்லை. ஆம், வாழ்ந்து கெட்டவர்களையும் இருந்து இழந்தவர்களையும், உயர்ந்து தாழ்ந்தவர்களையும் எழுந்து விழுந்தவர்களையும் நம்முடைய கண்களுக்கு முன்பாக நாம் பார்த்துக்கொண்டுதானே உள்ளோம்.

ஆகவேதான், அப்போஸ்தலன் பவுல் தான் நேசித்த தீமோத்தேயுவுக்கு எழுதும்போது சரீர முயற்சி அற்ப பிரயோஜனமுள்ளது என்று எழுதியிருக்கிறார்.

இதை வாசிக்கும் நாம் ஒவ்வொரும் இந்த மா மனிதனின் வார்த்தைகளில் அடங்கியிருக்கும் பேருண்மையை உணர்ந்து சரீர முயற்சிக்கு முக்கியத்துவம் தந்து நமது வாழ்க்கையை வீணாக்கி விடாமல் தேவனுக்கு பயந்து, கற்பனைகளைக் கைக்கொண்டு அவர் சித்தம் செய்ய நம்மை ஒப்புக் கொடுக்க வேண்டும்.

## II. தேவபக்தி - எல்லாவற்றுக்கும் பிரயோஜனமுள்ளது :

இப்பொழுது நாம் தேவபக்தி பற்றி கவனிப்போம். நாம் பார்த்த வசனத்தில் தேவ பக்தி ***எல்லாவற்றிலும்*** பிரயோஜனமுள்ளது என்று தான் உள்ளது. ஆனால், ***எல்லாவற்றுக்கும்*** என்பது பொருள் மாறாத மாற்று வார்த்தையாக இருப்பதால் நான் இவ்வார்த்தையை இங்கே பயன்படுத்தியுள்ளேன்.

சரி, முதலாவது, "தேவபக்தி" என்றால் என்னவென்று பார்த்து விடுவோம் தேவன் மீது நாம் வைத்திருக்கிற பக்தியென்று நாம் பொதுவாக தெரிந்து வைத்திருந்தாலும், இதற்கு இன்னும் ஆழமான பொருள் உண்டு. ஒரு வேத அறிஞன் இதற்கு இவ்விதம் விளக்கம் கொடுக்கிறார். "ஒன்றான மெய்த்தேவனை நோக்கிப் பார்ப்பதும், அவருக்கு ஏற்ற வகையில் வாழ்வதும் தான்" தேவபக்தி என்று. வேறொரு வேத அறிஞன், "சரியான நம்பிக்கையினடிப்படையில் மேற்கொள்ளப்படும், மிகச் சரியான செயல்பாடுகளுடனான வாழ்க்கை" என்று கூறுகிறார். "தேவபக்தி" என்ற இந்த வார்த்தையை மற்ற எல்லா வேத ஆசிரியர்களைக் காட்டிலும் பவுலடியார் அதிகமாக உபயோகப்படுத்தியுள்ளார். குறிப்பாக, தான் விசுவாசத்தில் பெற்றெடுத்து தன்னால் நேசிக்கப்பட்ட இரண்டு குமாரர்களுக்கு எழுதும்போது இதை பயன்படுத்தியுள்ளார். (1 தீமோ 2:2, 3:16, 4:7-9, 6:3, 5-6.11. 2 தீமோ 3:5, தீத்து 1:3,2:12). ஒரு வேளை தனிப்பட்ட ஒரு மனிதனுடைய வாழ்க்கையில் தேவபக்தி மிகவும் அவசியம் என்பதை வலியுறுத்துவது இதன் நோக்கமாக இருக்குமோ?

இப்படி மிகுந்த முக்கியமான, அதிக ஆழமுள்ள பொருளைத் தரக்கூடிய, தனிப்பட்ட கிறிஸ்தவ வாழ்க்கைக்கு மிக அவசியமான "தேவபக்தி" இரண்டுக்கும் - அதாவது இந்த ஜீவனுக்கும் இனிவரும் ஜீவனுக்கும் போதுமென்று பரிசுத்த ஆவியானவர் பவுலைக் கொண்டு சொல்லுகிறபடியால், அது எப்படிப் போதுமானதென்று இப்பொழுது பார்ப்போம்.

### A. இந்த ஜீவனுக்கும் பிரயோஜனமுள்ளது

அநேகருடைய பொதுவான அபிப்ராயம், தேவபக்தி இந்த ஜீவனுக்கு லாயக்கற்றது என்பதுதான். ஒருவேளை இக்கருத்தை பெரும்பாலானவர்கள் வாய்விட்டுச் சொல்லாவிட்டாலும் தங்கள் நடவடிக்கைகளால் நாளும் வெளிப்படுத்திக் கொண்டுள்ளனர். அநேகர், தேவ காரியங்களில் நாட்டம் அற்றவர்களாக இருப்பதற்குக் காரணம் இப்படிப்பட்ட மனோபாவமே. ஒருவேளை, நாட்டம் கொண்டவர்களும் நாளும் கழிந்து கொண்டே போவதற்கும் இப்படிப்பட்ட மனநிலைதான் காரணம்.

ஆனால், நாம் இப்பொழுது பார்த்த விளக்கத்தின்படியும், வேத வசனங்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ள அர்த்தத்தின் படியும் ஒருவன் தேவபக்தியாய் நடந்தால் அவன் வாழ்க்கை இப்பூமியில் நிச்சயமாக ஆசீர்வதிக்கப்பட்டிருக்கும். யாருக்கும் சந்தேகம் தேவையில்லை. தயவு செய்து வாக்கு மாறாத

தேவனால் கொடுக்கப்பட்டுள்ள கீழ்க்கண்ட வசனங்களையெல்லாம் கவனியுங்கள் "உம்மை உறுதியாய்ப் பற்றிக்கொண்ட மனதையுடையவன் உம்மையே நம்பியிருக்கிறபடியால், நீர் அவனை பூரண சமாதானத்துடன் காத்துக்கொள்வீர் (ஏசா 26:3) "கர்த்தர் நல்லவர், இக்கட்டு நாளிலே அரணான கோட்டை, தம்மை நம்புகிறவர்களை அறிந்திருக்கிறார்" (நாகூம் 1:7). "...நீ என்னை நம்பினபடியினால் உன் பிராணன் உனக்குக் கிடைத்த கொள்ளைப் பொருளைப் போல் இருக்குமென்று கர்த்தர் சொல்லுகிறார்" (எரேமியா 39:18)

இன்னும், இந்தப் பூமியில் ஒரு மனிதன் வாழ்வதற்கு தேவையான உணவும், உடையும் அவனுக்கு தேவபக்தியின் மூலம் கிடைக்குமென்று இயேசு தமது மலைப்பிரசங்கத்தில் கூறியிருக்கிறார். "முதலாவது, தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள். அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூட கொடுக்கப்படும்" (மத் 6:33) என்று. இயேசுவின் இக்கருத்துக்கு தாவீதும் பக்கபலம் சேர்க்கிறார். "சிங்கக் குட்டிகள் தாழ்ச்சியடைந்து பட்டினியாயிருக்கும் : கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையுங் குறைவுபடாது" (சங் 34:10) என்று.

அது மாத்திரமல்ல, ஏராளமான கவலைகள் பெருக்கெடுத்து ஓடுகின்ற இந்த உலகத்தில் தேவபக்தியாய் நடக்கிற ஒரு மனுஷன் எதிர் நீச்சல் போட முடியும் என வசனம் கூறுகிறது. ஆம், அந்தக் கவலைகளினால் தேவபக்தியுள்ளவனும் அடித்துச் சென்று விடாமல் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள வழியுண்டென்று, அப்போஸ்தலர்களாகிய பவுலும், பேதுருவும் நமக்கு கூறியுள்ளனர். "நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல் எல்லாவற்றையுங் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும், வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள். அப்பொழுது எல்லாப்புத்திக்கும் மேலான தேவசமாதானம் உங்கள் இருதயங்களையும், உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும் "(பிலி 4:6.7) அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால் உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள்" (1 பேதுரு 5:7) என்று.

தேவபக்தி, இந்த ஜீவனுக்குப் போதுமானதென்பதற்கு ஆதாரமாக ஒரு சம்பவத்தை சொல்கிறேன். ராஜாக்களின் நாட்களில் வாழ்ந்த ஒரு பெயர் சொல்லப்படாத விதவை. தனது பூமிக்குண்டான வாழ்க்கைக்கான கடைசி ஆகாரமாக, பானையிலே ஒரு பிடி மாவும், கலசத்திலே கொஞ்சம் எண்ணெயும் வைத்துக்கொண்டு அதைச் சமைத்துச் சாப்பிட்டுச் செத்துப்போகும்படியாக இரண்டு விறகு பொறுக்கிக் கொண்டிருந்தாள். அப்போது, கர்த்தருடைய தீர்க்கதரிசியாகிய எலியா அவளைக் கூப்பிட்டு கொஞ்சம் தண்ணீரும், கொஞ்சம் அப்பமும் கேட்கிறான். அவள் பயந்து யோசித்த பொழுது அவன் **இஸ்ரவேலின் தேவன் உன்னைக் காப்பாற்றுவார்**

***நீ போய் நான் சொல்கிறபடி செய் என்றான். அவள் போய் எலியாவின் சொற்படி செய்தாள்.*** கர்த்தர் எலியாவைக் கொண்டு சொன்ன வார்த்தையின்படியே மா செலவழிந்துபோகவும் இல்லை. கலசத்தின் எண்ணெய் குறைந்து போகவும் இல்லை என்று வேதம் கூறுகிறது (1 இராஜாக்கள் 17:9-16)

இஸ்ரவேலின் தேவன் மீது பக்திகாட்டின அந்த விதவைக்கு தேவன் செய்த நன்மையைப் பாருங்கள். அவரை நம்புகிறவர்களுக்கு இந்த ஜீவனுக்குண்டான ஆசீர்வாதங்களை அவர் கண்டிப்பாகக் கூட்டித் தருகிறார்.

## B. இனிவரும் ஜீவனுக்கும் பிரயோஜனமுள்ளது

தேவபக்தி, இரண்டுக்கும் போதுமென்று சொல்வதின் பொருளே, அது இனிவரும் ஜீவனுக்கும் பிரயோஜனமுள்ளதாய் இருக்கிறதென்பது தான். இனிவரும் ஜீவனைக் குறித்து மனித சமுதாயம் பெரிதாகக் கவலைப்படுவதுபோல் தெரியவில்லை. இம்மைக்கே நேரம் போதாமலிருக்கும் போது மறுமையைக் குறித்து சிந்திப்பதற்கும், அதற்கான செயல்களில் ஈடுபடுவதற்கும் அவனுக்கு நேரம் எங்கே?

ஆயினும், தேவனுக்குப் பயந்து, பக்தியாய் நடக்கிற பிள்ளைகளுக்கு தேவன், இம்மைக்கானவைகளோடு மறுமைக்கானவைகளையும் வாக்குத்தத்தம் செய்துள்ளார் என்பதை நாம் தெரிந்து கொள்ளாமலிருக்கக் கூடாது.

ஒரு சமயம் சீடன் பேதுரு, நாங்கள் உம்மைப் பின்பற்றினதற்குக் கூலியாக எங்களுக்கு என்ன கிடைக்குமென்று கேட்டான். “அதற்கு இயேசு பிரதியுத்தரமாக : ... இம்மையிலே, துன்பங்களோடே கூட நூறத்தனையாக வீடுகளையும், சகோதரரையும், சகோதரிகளையும், தாய்களையும், பிள்ளைகளையும் நிலங்களையும், “மறுமையிலே நித்திய ஜீவனையும்” அடைவான் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். (மாற்கு 10:28-30) என்றார். ஆம் ஒருவனுடைய தேவபக்தியினாலே கிடைக்கிற மிகப்பெரிய ஆசீர்வாதம் “நித்தியஜீவன்”.

அது மாத்திரமல்ல, தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவருக்கும் “வாடாத ஜீவ கிரீடம்” வைக்கப்பட்டிருக்கிறதென்று வாக்கு கொடுக்கப்பட்டுள்ளது. (2 தீமோ 4:8) இந்த ஜீவகிரீடம் பற்றி யோவானுக்கு வெளிப்படுத்தின விசேஷத்திலும் உறுதி செய்யப்பட்டிருக்கிறது. (வெளி 2:10)

இந்த பூமியின் வாழ்க்கையில் ஒருவனுடைய ஜீவன் ஒரு நாளில் போகக் கூடியதாகவும், இந்தப்பூமியின் வாழ்க்கையில் புகழுக்குள் சென்றவர்களுக்கு சூட்டப்படும். கிரீடம் வாடிப்போகிற தன்மையுடையதாகவும் இருக்கிறது. ஆனால், தேவபக்தியில் தொடர்ந்து வாழ்பவர்க்கோ நித்திய ஜீவனும், வாடாத ஜீவகிரீடமும் வாக்குத்தத்தம் செய்யப்பட்டிருக்கிறது இது என்ன லேசான காரியமா? இந்த இரண்டினுடைய மேன்மை உங்களுக்குப் புரிகிறதா? இப்பொழுதாவது தேவபக்தி எல்லாவற்றுக்கும் அதாவது இந்த ஜீவனுக்கும் இனிவரும்

ஜீவனுக்கும் பிரயோஜனமுள்ளதென்று விளங்குகிறதா? சொல்லுங்கள்.

தான் விசுவாசத்தில் பெற்றெடுத்த உத்தம குமாரன் இவ்வளவு நன்மைகளை, இழந்து விடக்கூடாதென்பதற்காகத் தான், என் மகனே, நீ தேவபக்திக்காக முயற்சி பண்ணு. தேவ பக்தியில் தேறினவாயிரு என்று அடிக்கடி கூறுகிறார். ஆகை யால், அருமையானவர்களே, நம் ஒவ்வொருவருடைய இரண்டு வாழ்க்கையும் ஆசீர்வதிக்கப்பட வேண்டுமானால் நாம் தேவ பக்தியாய் நடப்பது மிகவும் அவசியம்.

இந்தக் கட்டுரையை முடிக்கும் முன்பாக, இது சம்பந்தப் பட்ட இன்னொரு காரியத்தையும் உங்களுக்கு சொல்ல விரும்பு கிறேன். நாம் இப்பொழுது தியானித்த வேத வசனத்திற்கு (1 தீமோ 4:8) அடுத்த வசனத்தையும் தயவுகூர்ந்து கவனியுங்கள். “இந்த வார்த்தை உண்மையும் எல்லா அங்கீகரிப்புக்கும் போது மானதாக இருக்கிறதென்று பவுல் சொல்வது உண்மை என்று அங்கே மீண்டும் சொல்கிறார் அல்லது பரிசுத்த ஆவியானவர் அது உண்மைதொனென்று எழுதும்படி தூண்டுகிறார். ஏன்?

“இந்த வார்த்தை உண்மை என்று பவுல் இங்கே மாத்திரம் எழுதாமல் வேறுசில இடங்களிலும் குறிப்பிட்டுள்ளார். உதாரணமாக, “பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் என்கிற வார்த்தை. உண்மையும் எல்லா அங்கீகரிப் புக்கும் பாத்திரமுமானது ...” (1 தீமோ 1:15) இன்னும், “கண்காணிப்பை விரும்புகிறவன் நல்ல வேலையை விரும்பு கிறான். இது உண்மையான வார்த்தை” (1 தீமோ 3:1) இந்த வசனங்களையெல்லாம் கவனிக்கும்போது நமக்கொரு உண்மை புலனாகிறது. அதாவது, மனிதர்கள், சொல்லப்படுகின்ற தேவ காரியத்தின் மேன்மையை உணரமுடியாமல் தடுமாறி, தனக் கிருக்கும் சிற்றறிவினடிப்படையில் அதை அணுகி, முழுமை யாகப் புரிந்து கொள்ள முடியாமல், அவைகளை ஏற்றுக் கொள்ளாமல் ஒதுக்கி விடுவதற்கு வாய்ப்பிருக்கிறதென்று பவுலடியார் எப்பொழுதெல்லாம் எண்ணினாரோ, அப்பொழு தெல்லாம் “இந்த வார்த்தை உண்மையானது” என்று சேர்த்திருக் கிறார். அதன் பொருள், இது சத்தியமான வார்த்தை ஒருவேளை உனக்கு விளங்கவில்லை யென்பதற்காக ஏற்றுக்கொள்ளாமல் விட்டு விடாதே, எப்படி யாவது ஏற்று இதன்படி செய் என்பது தான்.

அப்படியானால், அருமையானவர்களே, “தேவ பக்தி யானது இந்த ஜீவனுக்கும், இதற்குப் பின்வரும் ஜீவனுக்கும் வாக்குத்தத்தமுள்ளதென்றும் எல்லாவற்றுக்கும் பிரயோஜன முள்ளதென்றும்” பவுல் சொல்லிவிட்டு இந்த வார்த்தை உண்மையும் எல்லா அங்கீகரிப்புக்கும் பாத்திரமுள்ளதென்று சொல்லியிருக்கிறபடியால், நாம் நம்முடைய வாழ்க்கையில் இவ்வார்த்தைகளை அட்சரம் பிசகாமல் அப்படியே ஏற்றுக் கொண்டு தேவ பக்தியாய் முழுமையாக நடந்து, இரண்டு ஜீவன்களுக்குமான ஆசீர்வாதங்களைப் பெற்று இம்மையில் சுக ஜீவிகளாகவும், மறுமையில் நித்திய ஜீவிகளாகவும் ஜீவிப்பதற்கு பரலோகத்தின் தேவன் உங்களுக்கு துணை புரிவாராக. ஆமென்.

**S. ராஜநாயகம்**

# நற்செய்திப்பணி செய்வதெப்படி?

இப்பாடத்தில் சுவிசேஷப் பணியை செய்வதெப்படி? என்பதைக் குறித்து ஆராயலாம். சபையானது புதிதாக தொடங்கப் பட்டாலும், கிறிஸ்துவினிமித்தம் நற்செய்தி அறிவிக்கும் பணி அதற்கு உண்டு. இதில் நாங்கள் அபார நம்பிக்கையுடையவர் களாயிருப்பதால், நீங்களும் இப்பணி குறித்து உற்சாகமுடைய வர்களாயிருக்க விரும்புகிறோம்.

பிரதான கட்டளையிலிருந்து ஆரம்பிப்பதுதான், சுவிசே ஷப் பணியின் அவசியத்தை நாம் தெரிந்து கொள்வதற்கு சிறந்த வழியாகும். கிறிஸ்துவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதலுக் குப் பிறகு, அவர் பிதாவினிடத்திற்கு செல்லும் முன்பாக, இயேசு அப்போஸ்தலர்களிடம் பேசினார். பின்பு அவர் அவர்களை நோக்கி; நீங்கள் உலகமெங்கும் போய் சர்வசிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ் நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான். விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான் என்றார். (மாற் 16:15, 16) மேலும் அவர் கூறினார். “ஆகையால் நீங்கள் புறப்பட்டுப் போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து நான் உங்களுக்கு கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக் கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களு டனே கூட இருக்கிறேன் என்றார்”. ஆமென். (மத். 28:19,20) லூக்கா, இப்படியாய் எழுதுகிறார். எழுதியிருக்கிறபடி, “கிறிஸ்து பாடுபடவும், மூன்றாம் நாளில் மரித்தோரிலிருந்தெழுந்திருக்க வும் வேண்டியதாயிருந்தது. அன்றியும் மனந்திரும்புதலும், பாவ மன்னிப்பும் எருசலேம் தொடங்கிச் சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்படவும் வேண்டியது. நீங்கள் இவைகளுக்குச் சாட்சிகளாயிருக்கிறீர்கள். என் பிதா வாக்குத்தத்தம் பண்ணினதை இதோ, நான் உங்களுக்கு அனுப்பு கிறேன். நீங்களும் உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக் கப்படும் வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள்” என்றார் (லூக்கா 24:46-49). இறுதியாக, இயேசுவின் வார்த்தைகளை நாம் வாசித்தோமானால் “பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும் போது நீங்கள் பெலனடைந்து எருசலேமிலும், யூதேயா முழுவ திலும், சமாரியாவிலும் பூமியின் கடைசி பரியந்தமும் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்” என்றார் (அப். 1:8).

மேற்கூறப்பட்டுள்ள வேத வாக்கியங்களில் இயேசு சொல்லு கிறது என்னவென்றால், சுவிசேஷம் உலகெங்கும் எடுத்துச் செல்லப்பட வேண்டும். உலகிலுள்ள எல்லா தேசத்திற்கும், உலகெங்கிலும் உள்ள ஒவ்வொரு நாட்டின் சிருஷ்டிக்கும் அது

எடுத்துச் செல்லப்படவேண்டும். இந்த சுவிசேஷம் முதலாவது எருசலேமிலும் பின்பு யூதேயாவிலும், அதற்கு பின்பு சமாரியா விலும், இறுதியாக பூமியின் கடைசி பரியந்தமும் பிரசங்கிக்கப் படவேண்டும் என்று சொன்னார். இந்தக் காரியத்தைச் செய்வ தற்கு அவர்களை வழிநடத்தும்படியாக பரிசுத்த ஆவியின் வல்ல மையை அப்போஸ்தலர்களுக்குத் தருவேன் என்றும் சொன்னார். பாருங்கள், புதிய ஏற்பாடு, முழுமையான எழுத்து வடிவில் வெளிப்படுவதற்கு முன்பான காலத்தில் அவர்கள் வாழ்ந் தார்கள். ஆகையால், இன்றைக்கு நம்மிடம் இருக்கும் புதிய ஏற்பாடு முழுமையாக எழுத்து வடிவில் வெளிப்பட்டிருப்பதால், இனிமேலும் நமக்கு பரிசுத்த ஆவியின் அற்புதமான வழி நடத்துதல் அவசியமில்லை.

இப்பொழுதும் அப் 2-ம் அதிகாரத்திற்கு நாம் செல்லுவோ மானால், அங்கு அப்போஸ்தலர்கள் எருசலேம் பட்டணத்தில் கூடியிருந்ததைக் காணலாம். உண்மையில் அங்கே சுவிசேஷம் அறிவிக்கப்படவும் இல்லை. சபையானது அப்பொழுது நடை முறையிலும் இல்லை. ஆனால், பிறகு அப்போஸ்தலர்களை வழி நடத்தவும், அந்த நாட்டு மக்களின் மொழிகளில் பேசும்படியாக உதவவும், அற்புதங்களை நிகழ்த்த ஏதுவாகவும் அவர்கள் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டார்கள். அவர்கள் கள்ளப் போதகர்கள் அல்ல என்பதையும், உண்மையில் தேவனுடைய மனுஷர்கள் என்பதையும், மக்கள் நம்பும்படியாக இந்த வரம் அவர்களுக்கு கொடுக்கப்பட்டது. கிறிஸ்து உயிர்த்தெழுந்த பிறகு வந்த முதல் பெந்தெகொஸ்தே நாளில் உலகெங்குமுள்ள யூதர் கள் அதனைக் கொண்டாடும்படியாக கூடிவந்திருக்கின்றனர். கர்த்தர் நற்செய்தியை அறிவிக்கும்படியாக அந்த நாளை தேர்ந் தெடுத்தார். அதன் விளைவாக மூவாயிரம் பேர் தாங்கள் என்ன செய்ய வேண்டும் என்பதை அறிந்து கொள்ள விரும்பினர். பேதுரு அவர்களை நோக்கி, நீங்கள் மனம் திரும்பி ஒவ்வொரு வரும் பாவ மன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தி னாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள் அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள் என்றார்... அவனு டைய வார்த்தையைச் சந்தோஷமாய் ஏற்றுக் கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள். அன்றைய தினம், ஏறக்குறைய மூவாயிரம் பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள்... இரட்சிக்கப்ப டுகிறவர்களைக் கர்த்தர் அனுதினமும் சபையில் சேர்த்துக் கொண்டு வந்தார் (அப். 2:38,41,47). இப்படியாக கர்த்தரின் சபை எருசலேமில் ஸ்தாபிக்கப்பட்டது. சுவிசேஷம் மீண்டும் மீண்டுமாக பிரசங்கிக்கப்பட்டது. அநேகர் கர்த்தருக்கு கீழ்ப்படிந் தார்கள். பின்பு பிலிப்பு சமாரியா வரை சென்று சுவிசேஷத்தைப் பிரசங்கித்த வேளையில், அநேகர் விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்றார்கள். மேலும், அப். 8ம் அதிகாரத்தில் எத்தியோப்பியா விலிருந்து வந்த மந்திரிக்கு பிரசங்கிக்கும்படி பிலிப்பு கர்த்தரு டைய தூதனால் வழிநடத்தப்பட்டான். அவன் கேள்விப் பட்டபடி செய்து கர்த்தருக்குக் கீழ்ப்படிந்தான். அவன் தன்

நாட்டுக்குத் திரும்பச் சென்று, கிறிஸ்து வந்ததின் நோக்கத்தை, உலகத்தின் அந்த பகுதியிலுள்ள மக்களுக்கு எடுத்துரைத்திருப்பான் என்பதில் ஐயமில்லை. இப்படியாய் சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்டு சபை அநேக இடங்களில் ஸ்தாபிக்கப்பட்டது.

அப். 9-ம் அதிகாரத்தில் சவுலின் மனமாற்றத்தைக் குறித்து வாசிக்கிறோம். அவர் தன் வெவ்வேறு சுவிசேஷப் பிரயாணங்களில் என்ன செய்தார் என்பதும் நமக்கு தெரியும். ஆசியா முழுவதிலும், ஏன் ஐரோப்பாவிலும் கூட சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார். அந்த சுவிசேஷம் வானத்தின் கீழிருக்கிற சகல சிருஷ்டிகளுக்கும் பிரசங்கிக்கப்பட்டு வந்தது என்று கொலோ 1:23-ல் கூறினார். மேலும் சுவிசேஷத்தின் சத்தம் பூமியெங்கும், அவைகளின் வசனங்கள் பூச்சக்கரத்துக் கடைசி வரைக்கும் செல்லுகிறது என (ரோமர் 10:18)ல் அவர் கூறினார். சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்டு முப்பது ஆண்டுகளுக்குள்ளாக அது உலகமெங்கும் எடுத்துச் செல்லப்பட்டுள்ளது என்பதை சற்று சிந்தித்துப் பாருங்கள்! ஆம், சபையானது எருசலேம் அந்தியோகியா, கொரிந்து, எபேசு, பிலிப்பு, தெசலோனிக்கேயா, பெரோயா, கொலோசெ மற்றும் ரோமாபுரி ஆகிய இடங்களிலும் உலகெங்குமுள்ள ஆயிரக்கணக்கான பகுதிகளிலும் ஸ்தாபிக்கப்பட்டது. இதை எப்படிச் செய்ய முடிந்தது? அப்போஸ்தலர்கள் தங்கள் பணியை எருசலேமில் ஆரம்பித்தனர். அவர்கள் வாழ்வில் மீதமிருந்த நாட்களில் பல்வேறு இடங்களில் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து கர்த்தருடைய சபையை ஸ்தாபித்தனர். ஆனால், செய்ய வேண்டிய காரியங்கள் அனைத்தையும் அவர்களால் செய்ய இயலவில்லை. ஆகையால், அவர்கள் மூலம் மனந்திரும்பியவர்கள் சுவிசேஷத்தை உலகெங்கும் பிரசங்கிப்பதில் உதவி செய்தனர். பிலிப்பு, ஸ்தேவான், மற்றும் நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான விசுவாசிகள் அந்நாட்களில் இருந்தனர். அப்போஸ்தலரோ, அவர்களால் மனந்திரும்பியவர்களோ, புதிய இடங்களுக்குச் சென்று சுவிசேஷத்தை அறிவித்தபொழுது, அவர்கள் அதைக் கேட்டு விசுவாசித்து, பாவங்களிலிருந்து மனந்திரும்பி கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று அறிக்கையிட்டு பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றார்கள். அவர்களை கர்த்தர் இரட்சித்து தமது சபையிலே சேர்த்துக் கொண்டார். இவ்வாறு கர்த்தருக்கு கீழ்ப்படிந்தவர்களின் எண்ணிக்கையைக் கொண்டு ஆங்காங்கே சபைகள் உருவாயின. சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படியாக அங்கே அவர்கள் தங்கியிருந்தனர். அநேகர் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்ததால், சபை வளர்ந்தது. சிலவேளைகளில் அவர்கள் அங்குள்ள மற்ற பட்டணங்களுக்கும், நகரங்களுக்கும், கிராமங்களுக்கும் சென்று சுவிசேஷத்தைப் பிரசங்கித்தனர். அங்கேயும் சபைகள் ஸ்தாபிக்கப்பட்டன. இவ்வாறு இயேசு கிறிஸ்து வந்ததின் நோக்கம் உலகெங்கும் பரவும் வரை, இது தொடர்ந்தது.

உலகம் முழுவதும் சுவிசேஷத்தை எடுத்துச் செல்ல இன்றும் கர்த்தர் நமக்கு கட்டளையிடுகிறார். நீங்கள் கர்த்தருக்கு கீழ்ப்

படிந்திருந்தால், இரட்சிக்கப்பட்டிருக்கிறீர்கள். மேலும், கர்த்தருடைய சபையில் அங்கத்தினராயும் இருக்கிறீர்கள். ஆனாலும், நீங்கள் இருக்கும் இடத்தில் சபை இல்லாதிருக்கலாம். எப்படி அங்கே சபை இருக்க முடியும்? அங்கேயுள்ள மக்களுக்கு சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதன் மூலம் தான் சபை இருக்க முடியும். உங்கள் நண்பர்களையும், குடும்ப அங்கத்தினர்களையும் வைத்து அதை தொடங்கலாம். இப்படிச் செய்வது ஒரு ஆணுக்கு சுலபமாய் இருக்கும். ஆனால், ஒரு பெண்ணோ அல்லது இளைஞரோ இதை எப்படிச் செய்ய முடியும்? அப்படி இருக்குமானால், நீங்கள் தனிப்பட்ட முறையில் உபதேசிக்கலாம் அல்லது சில கூட்டங்கள் நடத்த உதவும்படியாக வேறு ஒருவரை அழைக்கலாம். நீங்கள் அங்கே கிறிஸ்தவராக இருந்தால் உண்மையாக அங்கே ஒரு சபையை உருவாக்க விரும்பினால் அதைச் சாத்தியமாக்க உதவும்படியாக ஏதாவது செய்ய முடியும் என நிச்சயமாக நம்புகிறேன்.

சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க சுவிசேஷக் கைப்பிரதிகளையோ பத்திரிக்கைகளையோ பயன்படுத்தலாம். தனிப்பட்ட பாடங்கள் நடத்தலாம். மேலும் வேதாகம வகுப்புகள் ஒழுங்கு செய்யலாம்.

தேவனுடைய வார்த்தையை போதுமான அளவு உபதேசிக்கும் பொழுது மனந்திரும்புதல் உண்டாகும். அவ்வாறு மனந்திரும்பியவர்களைக் கொண்டு சபையை தொடங்கலாம். அதாவது, அங்கேயுள்ள கிறிஸ்தவர்கள் ஒரு வீட்டிலோ, பள்ளியிலோ, அறையிலோ அல்லது மரத்தடியிலோ கூடித் தொடங்கலாம். நீங்கள் கூடி வருவதும், ஆராதிப்பதும், தொடர்ந்து தேவனுடைய வார்த்தையை உபதேசிப்பதுமே முக்கியமான காரியம் சுவிசேஷப் பணியாளராய் இருங்கள். எப்போதும் பிறருக்கு உபதேசிக்கும் தருணத்தை எதிர்நோக்கி இருங்கள். அந்தப் பணியை செய்து கொண்டே சில வேளைகளில் அந்த பகுதியிலுள்ள நகரத்தில் மற்றும் கிராமங்களில் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க முயற்சிகள் எடுக்கலாம்.

நாம் இருப்பதை வைத்து திருப்தி அடைவதை கர்த்தர் விரும்பவில்லை என்பதை நினைவில் கொள்ளுங்கள். நாம் போய் பிரசங்கிப்பதையும், மனமாற்றமடையச் செய்வதையும், அவர் நோக்கத்தை அறிவிப்பதையுமே விரும்புகிறார். இந்தப் பணியை நாம் செய்யவே அவர் விரும்புகிறார். நாம் அதை செய்யும் பொழுது அவர் நம்மோடிருந்து நம்முடைய முயற்சிகளையும் ஆசீர்வதிப்பார். இந்த சுவிசேஷப் பணியை செய்யும் நம்முடைய பிரயாசத்தையும் ஆசீர்வதிப்பார். இந்த சுவிசேஷப் பணியைச் செய்யும் நம்முடைய பிள்ளைகளுக்கும், இளைஞர்களுக்கும் கூட நாம் உபதேசித்து, ஊக்கப்படுத்த வேண்டும். நீங்கள் இருக்கும் இடத்தில் உங்களால் முடிந்ததை நீங்கள் செய்யும் பொழுது தேவன் உங்களை ஆசீர்வதிப்பார்.

**J.C. Choate** **J.C. சோட்**

பெண்கள் பகுதி

# கிறிஸ்தவக் குடும்பத்தை கட்டுவது

மனிதனுடைய தேவைகளை சந்திப்பதற்காக தேவனால் வடிவமைக்கப்பட்ட ஸ்தாபனம் தான் குடும்பம் என்பது (ஆதி. 2:8-25). குடும்பம் தன் காரியத்தில் தவறும் போது சமுதாயம் சீரழிகிறது. இன்றைய சமுதாயமானது, மிகவும் பலவீனமான, பிரயோஜனமற்ற, முறிந்து போன, உடைந்து போன குடும்பங்களை உள்ளடக்கியது.

ஆதியிலிருந்தே ஒரு ஆண் ஒரு பெண்ணோடு இணைந்து வாழ வேண்டுமென்று தேவன் திட்டமிட்டிருந்தார். "அதெப்படியென்றால் புருஷனுடைய ஸ்திரீ தன் புருஷன் உயிரோடிருக்குமளவும் நியாயப்பிரமாணத்தின்படியே அவனுடைய நிபந்தனைக்கு உட்பட்டிருக்கிறாள்; புருஷன் மரித்த பின்பு புருஷனைப் பற்றிய பிரமாணத்தினின்று விடுதலையாயிருக்கிறாள்" (ரோம 7:2) வீடு, குடும்பம் ஆகிய இரண்டுமே, பிதா, குமாரன் ஆகிய இருவருக்கும் மிகவும் முக்கியமாகப்பட்டது. "இப்படியிருக்கிறபடியால் அவர்கள் இருவராயிராமல், ஒரே மாம்சமாயிருக்கிறார்கள். ஆகையால், தேவன் இணைத்ததை மனுஷன் பிரிக்காதிருக்கக்கடவன்" (மத். 19:6).

குடும்பத்திற்குள்ளாகத்தான் ஒரு கணவனும், மனைவியும் அன்பை பெற்றுக்கொள்கின்றனர். ஒரு கூட்டாளித்தனத்தையும், தங்களைத் தாங்களே திருப்திப்படுத்திக் கொள்ளும் தன்மையையும் (1கொரி. 7:2-5) பெற்றுக்கொள்கின்றனர். பிள்ளைகளை இந்த உலகிற்கு கொண்டு வரவும், அவர்கள் குடும்பத்தில் அப்பா, அம்மாவுடன் வளரவும் தேவன் விருப்பம் கொண்டிருந்தார். ஆனால் இன்றைக்கு குடும்பங்கள் சாத்தானால் தாக்கப்பட்டு இருக்கிறது. சாத்தானோடு இருக்கும் போராட்டத்தில், நம் குடும்பத்தைக் காப்பாற்றிக் கொள்ளும் விஷயத்தில் நாம் பாடுபட வேண்டும்.

கிறிஸ்தவக் குடும்பங்கள் என்பது "ஒப்புக்கொடுத்தல்" என்ற கல்லின் மேல் கட்டப்படவேண்டும். முதலாவது கணவனும், மனைவியும் தேவனுக்கு தங்களை ஒப்புக் கொடுக்க வேண்டும். (1கொரி. 15:1-4; மாற்கு 16:16) அத்தோடு கூட ஒருவருக்கொருவர் ஒப்புக்கொடுத்து வாழ வேண்டும். ஒரு வல்லமையான, கிறிஸ்தவக் குடும்பத்தைக் கட்ட குடும்பத்தின் ஒவ்வொருவர் நலனுக்காகவும், மகிழ்ச்சிக்காகவும், ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்தல் மிகவும் அவசியம். ஒரு பலமுள்ள குடும்பத்தைக்கட்ட தன்னலமில்லாமல் நீ உன் நேரத்தையும், உன் பலத்தையும், உன் உடைமைகளையும் அத்தோடு உன்னையும் ஒப்புக் கொடுக்க வேண்டும். ஒப்புக்கொடுத்தலுக்கு விரோதி சுயநலம்.

தேவனுக்கு சேவை செய்வதின் மூலம் குடும்பங்கள் கட்டப்பட வேண்டும். தேவனுடைய சபையின் ஆராதனையில் தவறாமல் பங்கு கொள்வது கிறிஸ்தவக் குடும்பங்களுக்கு மிக அவசியமானது. "சபைக்கூடி வருதலைச் சிலர் விட்டு விடுகிறது போல நாமும் விட்டுவிடாமல், ஒருவருக்கொருவர் புத்தி சொல்லக்கடவோம். நாளானது சமீபித்து வருகிறதை எவ்வள வாய் பார்க்கிறீர்களோ, அவ்வளவாய்ப் புத்தி சொல்ல வேண்டும். (எபி. 10:25) ஒரு ஆராதனையையோ, ஒரு வேதப் பாட வகுப்பையோ அசட்டை செய்து கலந்து கொள்ளாமல் இருப்பது கிறிஸ்தவம் அவ்வளவு முக்கியமல்ல என்பதை உங்கள் பிள்ளைகளுக்கு கற்றுக்கொடுக்க வழிவகுத்து விடும். ஒரு குடும்பத்தை கட்டுவதற்கு ஜெபமும், வேத வாசிப்பும் முக்கிய பங்கை வகிக்கிறது. ஒவ்வொரு குடும்பமும் தெரிந்து கொள்ள வேண்டியது என்னவெனில், தேவன் 1. நித்தியமானவர் (சங். 90:2) 2. எல்லாம்வல்லவர் (ஆதி. 1:3), 3. நல்லவர் (யாக். 1:17) 4. பரிசுத்தமுள்ளவர் (1பேதுரு 1:16). 5. எங்கும் வியா பித்துள்ளவர் (சங். 139) முதல் முதலாக குடும்பத்தை ஸ்தாபித்த அந்த நித்திய தேவனை ஆராதிக்காமல் ஒரு மகிழ்ச்சியுள்ள பல முள்ள வெற்றியுள்ள குடும்பங்கள் கட்டப்படவே முடியாது.

ஒருவரையொருவர் மெச்சிக் கொள்ளுதல் என்ற கல்லின் மீது கிறிஸ்தவ குடும்பத்தைக் கட்டவேண்டும். மனிதகுலம் எதிர்பார்க்குதலில் மிகவும் தலையானது யாதெனில் பிறரிடம் மெச்சுதலைப் பெற்றுக் கொள்வது. கணவன், மனைவி, பிள்ளை கள் ஆகிய அனைவருக்கும் இந்த எதிர்பார்ப்பு பொது வானது. நம்முடைய இலட்சியமே, நம்மைச் சார்ந்தவர்கள், குழந்தைகள், பெற்றோர் இவர்களை மெச்சுதலாக இருக்க வேண்டும். "ஆதலால், மனுஷர் உங்களுக்கு எவைகளைச் செய்ய விரும்பு கிறீர்களோ, அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள். இதுவே நியாயப்பிரமாணமும், தீர்க்கதரிசனங்களுமாம். (மத். 7:12) மற்றவர்களை மெச்சுதல் என்பதை எளிமையாக இந்த தங்கச் சட்டத்தை படித்து செயல்படுத்துவதாகும். இது செய்யப் படவும் வேண்டும்.

கிறிஸ்தவக் குடும்பங்கள் அன்பினால் கட்டப்பட வேண்டும். ஒவ்வொரு கிறிஸ்தவக் குடும்பத்திலும் முக்கியமாக காணப்பட வேண்டியது. இந்த அன்பு என்பதுதான். ஒருவருக் கொருவர் தயவாயும், மன உருக்கமாயும் இருந்து கிறிஸ்துவுக் குள் தேவன் உங்களுக்கு மன்னித்தது போல நீங்களும் ஒருவருக் கொருவர் மன்னியுங்கள் (எபே. 4:32) "மன உருக்கம்" என்பது முக்கியமாக வலியுறுத்தப்படுகிறது. யாதொருவர் சாந்தம், அமைதி, பாதுகாப்பு, புரிந்து கொள்ளுதல் ஆகிய குணங்களு டன் இருந்தால் அவர்கள் தங்கள் குடும்பத்தை நன்றாக கட்டு வார்கள். புருஷர்கள் குறிப்பாக முரட்டுத்தனத்தை தவிர்க்க வேண்டும். புருஷர்களே உங்கள் மனைவிகளில் அன்பு கூருங்கள்

அவர்கள் மேல் கசந்து கொள்ளாதிருங்கள் (கொலோ 3:19) "இரக்கம்" "மனதுருக்கம்" ஆகிய இரண்டு குணங்களும் குடும்பத்தைப் பலமாக கட்ட தேவைப்படுபவையாகும்.

கிறிஸ்தவக் குடும்பங்கள் கட்டாயமாக 1. ஒருவருக்கொருவர் நண்பர்களாக இருக்க பழகி கொள்ள வேண்டும். 2. ஒருவர் பேச்சுக்கு ஒருவர் மரியாதை கொடுக்க வேண்டும். 3. ஒருவரில் ஒருவர் அன்பு கூற வேண்டும். 4. எல்லோரும் ஒன்றாக சேர்ந்து இருப்பதில் அதிக நேரத்தை செலவு செய்ய வேண்டும். 5. குடும்பத்திற்காகவும், தேவனுக்காகவும் வல்லமையாக ஒவ்வொருவரும் ஒப்புக்கொடுக்க வேண்டும். 6. அன்பாகவும், மனதுருக்கமாயும் இருக்க வேண்டும்.7. ஒருவருக்கொருவர் மன்னிக்க வேண்டும். 8. ஒருவரையொருவரை மெச்சிக் கொள்ள வேண்டும். 9. ஒருவர் சொல்வதை மற்றவர் கவனிக்க வேண்டும். 10. மற்றக் குடும்பங்கள் பரலோகம் செல்ல உதவி செய்ய வேண்டும்.

வல்லமையான குடும்பங்கள்
வல்லமையான சபைகளை கட்ட முடியும்.

B.B. சோட் R.R. நாயகம்

## ஞானஸ்நானத்திற்கு பின்பு

- புதிய மனுஷனைத் தரித்துக்கொள்வோம் (கொலோ 3:10)
- புது சிருஷ்டியாயிருப்போம் (2கொரி 5:17)
- இயேசுவின் புதிதான கட்டளையை கைக்கொள்வோம் (யோவா 13:34)
- நம்முடைய உள்ளத்திலே புதிதான ஆவியுள்ளவர்களாவோம் (எபேசி 4:23)
- புதிய நாமத்தால் நாம் அழைக்கப்படுவோம் (அப். 11:26)
- இயேசுவின் புதிதும் ஜீவனுமான மார்க்கத்தில் நடப்போம் (எபி 10:19)

வாலிபர் பகுதி

# இயேசு அற்புதமானவர்

வாலிப நெஞ்சங்களே ! உங்களை மறுபடியும் இந்த கட்டுரையின் வாயிலாக சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தன்னுடைய சரீரத்தை பிதாவினுடைய சித்தத்தை நிறைவேற்றும்படி பயன் படுத்தினார் என்பதை நாம் அறிந்திருக்கிறோம். இயேசு தன்னுடைய சரீரத்தின் ஒவ்வொரு உறுப்பையும் நமக்காக பயன்படுத்தினார். பழைய ஏற்பாடு இயேசுவைப் பற்றிய அநேக தீர்க்கதரிசனங்களை உள்ளடக்கியது. இயேசுவானவர் மனித இனத்திற்கு என்னவெல்லாம் செய்வார் என்றும், இயேசு எப்படிப்பட்டவராய் இருப்பார் என்பதைப் பற்றியும் பழைய ஏற்பாடு விவரிக்கின்றது. ஏசாயா 9:6 நமக்கு ஒரு பாலகன் பிறந்தார் என்று விவரிக்கின்றது. அதோடு கூட இயேசு அதிசயமானவர் என்றும் கூறுகின்றது. உண்மையாகவே, இயேசு இந்த உலகத்திற்கு வந்த போது அவரை கண்டவர்கள் அவர் *அதிசயமானவர்* என்பதை உணர்ந்து கொண்டார்கள். மத்தேயு ஆசிரியர் அவர் செய்த அதிசயங்களைப் பற்றி விவரிக்கும் போது "அவர் செய்த அதிசயங்களையும், தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா என்று தேவாலயத்திலே ஆர்ப்பரிக்கிற பிள்ளைகளையும், பிரதான ஆசாரியாரும், வேத பாரகரும் கண்டு, கோபமடைந்து" என்று கூறுகிறார் (மத்தேயு 21:15) இயேசு தன்னுடைய சரீரத்தின் ஒவ்வொரு உறுப்பையும் தன்னலமற்ற முறையில் பயன்படுத்தினதால் தான் அவர் செய்தவைகள் எல்லாம் அற்புதமாய் அமைந்தன. இப்போது நாம் இயேசு எப்படி தன்னுடைய சரீரத்தின் ஒவ்வொரு உறுப்பையும் பிதாவின் சித்தத்தை நிறைவேற்று வதற்கு பயன்படுத்தினார் என்று பார்த்து நாம் எப்படி நம்முடைய சரீரத்தின் ஒவ்வொரு உறுப்பையும் பிதாவினுடைய மகிமைக் கென்று பயன்படுத்தலாம் என்பதை கற்றுக்கொள்வோம்.

### I. *இயேசுவின் அற்புதமான பாதங்கள்*

"மனுஷக்குமாரன் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ் செய்யவும், அநேகரை மீட்கும் பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார் (மாற்கு 10:45) இயேசு ஊழியஞ்செய்யும்படி வந்தபடியினால் அவர் பிரயாணம் செய்ய வேண்டியதாயிருந்தது. அந்நாட்களில் கால்நடையாக தான் பிரயாணங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. இயேசு தன்னுடைய பாதங்களை பிரயாணத்திற்காக பயன்படுத்தியிருக்கிறார், சுவிசேஷத்தை மக்களுக்கு எடுத்துச் செல்வதற்காக எருசலேம் பட்டணத்தின் வழியாய் இயேசுவின் பாதங்கள் நடத்திருக்கின்றன. பிரசங்கம் செய்வதற்காக அவருடைய பாதங்கள் மலையின்

மேல் ஏறியிருக்கின்றன. ஜனங்களுக்கு போதனை செய்யும்படியாக படகின் மேல் அவருடைய பாதங்கள் ஏறியிருக்கின்றன. பாலைவனப் பகுதிகளில் அவருடைய பாதங்கள் நடந்தபோது எத்தனை வேதனையை அனுபவித்திருக்கும். சமாதானத்தின் சுவிசேஷத்தை அறிவிப்பதற்காகவும், மீட்பின் திட்டத்தை அறிவிப்பதற்காகவும் இயேசுவின் பாதங்கள் எத்தனை மைல்கள் நடந்திருக்கும்.

அப்போஸ்தலனாகிய பவுல் நற்செய்தியை பிரசங்கிக்கும் பிரசங்கியார்களின் பாதங்களைப் பற்றி விவரிக்கும்போது இப்படியாக விவரிக்கிறார் "சமாதானத்தைக் கூறி, நற்காரியங்களைச் சுவிசேஷமாய் அறிவிக்கிறவர்களுடைய பாதங்கள் எவ்வளவு அழகானவைகள்" என்று ஏசாயா 52:7யை மேற்கோள் காட்டுகிறார் (ரோமர் 10:15) இயேசு தாமே தம்முடைய பாதங்களைப் பற்றி விவரிக்கும்போது அப்போஸ்தலனாகிய யோவானிடம் தியத்தீரா சபைக்கு இப்படியாக எழுதும்படி சொன்னார். "அக்கினி ஜூவலை போன்ற கண்களும், பிரகாசமான வெண்கலம் போன்ற பாதங்களுமுள்ள தேவகுமாரன் என்று சொன்னார்" (வெளி 2:18). இப்படிப்பட்ட இயேசுவின் அற்புதமான பாதங்கள் உருவக்குத்தப்பட வேண்டும் என்று தீர்க்கதரிசனமாக உரைக்கப்பட்டிருந்தது (சங்கீதம் 22:16). இயேசு சிலுவையில் அறையப்பட்டபோது அது அப்படியே துல்லியமாக நடந்தேறியது, அவருடைய பாதங்களில் ஆணிகள் கடாவப்பட்டன. இயேசுவைப் பின்பற்றினவர்கள் அந்த அற்புதமான பாதங்களை பராமரித்தனர். மார்த்தாள் மற்றும் லாசருவின் சகோதரியாகிய மரியாள் விலையேறப்பெற்ற களங்கமில்லாத நளதம் என்னும் தைலத்தில் ஒரு இராத்தல் கொண்டு வந்து, அதை இயேசுவின் பாதங்களில் பூசி, தன் தலைமயிரால் அவருடைய பாதங்களைத்துடைத்தாள் என்று சொல்லப்பட்டிருக்கிறது (யோ 12:3) அதைப்போலவே இயேசுவின் உயிர்த்தெழுதலை முதலில் பார்த்த ஸ்திரீகள் இயேசுவின் அருகில் வந்து, அவர் பாதங்களைக் கழுவி அவரை பணிந்து கொண்டார்கள் (மத்தேயு 28:9). இயேசுவின் அற்புதமான பாதங்கள் இரட்சிப்பின் சுவிசேஷத்தை எடுத்துச் சொல்லாதிருந்தால் நம்முடைய நித்திய ஜீவன் கேள்விக்குரியாக மாறியிருக்கும் அவருடைய பாதங்கள் நமக்கு அற்புதமாக உள்ளனவா?

**II. *இயேசுவின் அற்புதமான கைகள்***

இயேசு இந்த பூமியில் வாழ்ந்த நாட்களில் அவருடைய கைகள் சுகமாக்கும் கைகளாக இருந்தன. இயேசுவின் கைகள் குஷ்டரோகிகளை தொட்டன உடனே குஷ்டரோகம் மறைந்து போய் விட்டது. அவருடைய கைகள் குருடர்களைத் தொட்டபோது அவர்கள் பார்வையடைந்தனர். ஒருமுறை பேதுரு இயேசு

விளிடத்தில் போக தண்ணீரின் மேல் நடந்தார். காற்று பலமாயிருக்கிறதைக் கண்டு பயந்து, அமிழ்ந்து போகையில், ஆண்டவரே என்னை இரட்சியும் என்று கூப்பிட்டார். உடனே இயேசு கையை நீட்டி அவரைப்பிடித்து அற்ப விசுவாசியே ஏன் சந்தேகப்பட்டாய் என்றார். இந்த சம்பவத்தில் இயேசுவின் கைகள் தூக்கிவிடும் கைகளாக, காப்பாற்றும் கைகளாக இருக்கின்றன (மத்தேயு 14:29-31). இதே அற்புதமான கைகள் தான் மரித்த யவீருவின் மகளை தூக்கி விட்டது. இயேசு அந்த சிறுபெண்ணின் கையைப் பிடித்து பிள்ளையே எழுந்திரு என்றார் அப்பொழுது அவள் உயிர் திரும்ப வந்தது உடனே அவள் எழுந்திருந்தாள் (லூக்கா 8:54,55). இப்படியாக இயேசுவின் கைகளுக்கு சரீரப்பிரகாரமான வல்லமை இருந்தது மாத்திர மல்லாமல் ஆவிக்குரிய வல்லமையும் இருக்கிறது. நான் அவை களுக்கு நித்திய ஜீவனைக் கொடுக்கிறேன். அவைகள் ஒருக்காலும் கெட்டுப்போவதில்லை, ஒருவனும் அவைகளை என் கையிலிருந்து பறித்துக் கொள்வதுமில்லை (யோவான் 10:28). இயேசுவின் கைகளுக்குள் நாம் இருக்கும்போது நமக்கு பாதுகாப்பு இருக்கிறது. நாமாக வேண்டுமானால் அந்த பாதுகாப்பு வளையத்திலிருந்து நம்மை நாமே பிரித்துக்கொண்டு போகலாம். ஆனால், இயேசுவின் கைகளிலிருந்து நாம் பிரிந்து போனால் நிச்சயமாக நித்திய நரகத்திற்கு தான் போவோம்.

### III. *இயேசுவின் அற்புதமான கண்கள்:*

இயேசு அப்போஸ்தலனாகிய யோவானிடம் தன்னுடைய கண்களைப் பற்றி தியத்தீரா சபைக்கு எழுதும்படி சொன்னார். இயேசுவின் கண்கள் அக்கினி ஜுவலை போன்ற கண்களாயிருக் கின்றன. இயேசுவின் கண்களைப் பற்றி நினைக்கும் போது பேதுரு அவரை மூன்றாவது முறையாக மறுதலித்தபோது இயேசு பேதுருவை நோக்கிப்பார்த்த அந்த காட்சி நமக்கு முன்பாக வருகிறது. அந்த பார்வை ஒரு கோபத்தின் பார்வையாக இருக்க வில்லை. அது ஒரு ஏமாற்றத்தின் பார்வையாகத்தான் இருந்தது. அந்த பார்வை அக்கினி ஜுவலைப் போல பேதுருவுக்குள் ஊடுருவிவிட்டது. இயேசுவின் கண்கள் இரக்கத்தை வெளிப் படுத்தினவைகளாகவே இருந்திருக்கின்றன. இயேசு தம்முடைய கண்களை ஏறெடுத்து, திரளான ஜனங்கள் தம்மிடத்தில் வருகிற தைக் கண்டு, பிலிப்புவை நோக்கி; இவர்கள் சாப்பிடத் தக்கதாக அப்பங்களை எங்கே கொள்ளலாம் என்று கேட்டார் (யோவான் 6:5). இயேசு அவர்களுடைய தேவைகளைப் பார்த்து அந்த தேவைகளை சந்திக்க மனதுருகினார், அவர்களுடைய தேவை களை சந்தித்தார். அநேக முறை இரக்கமும், உருக்கமும் நிறைந்த இயேசுவின் கண்கள் கண்ணீர் விட்டிருக்கின்றன. லாசரு மரித்த போது இயேசு கண்ணீர் விட்டார். இயேசு தன்னை

சிலுவையிலறையப் போகிறவர்களுடைய பிள்ளைகள் ரோம போர்ச் சேவகர்களால் அழிக்கப்பட போகிறதைக் குறித்து கண்ணீர் விட்டார். இயேசு எருசலேமுக்கு சமீபமாய் வந்த போது நகரத்தைப் பார்த்து, அதற்காக கண்ணீர் விட்டு அழுதார் (லூக்கா 19:41). அவர் ஒரு மனிதனை வெளிப்புறமாகப் பார்த்தால் அவனுடைய இருதயத்தின் நினைவுகளை அறியும் அளவிற்கு அவருடைய கண்கள் ஊருவி சென்றன. உதாரணமாக இயேசுவின் சீஷர்கள் தங்களுக்குள் யார் பெரியவன் என்று வாக்குவாதம் செய்த போது இயேசு அவர்கள் இருதயத்தின் யோசனையை அறிந்து கொண்டார் (லூக்கா 9:47). அதே கண்கள் இன்றும் நமக்குள் ஊடுருவுகின்றது. எபிரெய ஆசிரியர் அந்த கண்களைப் பற்றிச் சொல்லும் போது "அவருடைய பார்வைக்கு மறைவான சிருஷ்டி ஒன்றும் இல்லை; சகலமும் அவருடைய கண்களுக்கு முன்பாக நிர்வாணமாயும், வெளியரங்கமாயுமிருக்கிறது" என்று சொல்கிறார் (எபிரெயர் 4:13).

எனவே, வாலிப நெஞ்சங்களே! இயேசு தன்னுடைய சரீரத்தின் ஒவ்வொரு உறுப்பையும் அற்புதமாக தன்னலமற்ற முறையில் பயன்படுத்தினதால் தான் அவர் செய்தவைகள் எல்லாம் அற்புதமாய் அமைந்தன. இயேசு தன்னுடைய அற்புத மான சரீரத்தை எப்படி பிதாவின் சித்தத்தை நிறைவேற்று வதற்கு பயன்படுத்தினாரோ அதேப்போல நாமும் நம்முடைய சரீரத்தின் ஒவ்வொரு உறுப்பையும் தேவனுடைய நாம மகிமைக் கென்று பயன்படுத்துவோம். அதற்கு கர்த்தர் தாமே உதவி செய்வாராக ஆமென்.

**பென்னி மார்ட்டின்**

## மலைப்பிரசங்கம் - யாக்கோபு நிருபம் - ஒப்புமை

| | |
|---|---|
| 1. கேளுங்கள் (மத் 7:7) | - கேளுங்கள் (யாத் 1:5) |
| உ. நல்ல ஈவு (மத் 7:11) | - நன்மையான ஈவு (1:17) |
| 3. செயல் (7:24) | - செயல் (1:உஉ) |
| 4. பரஸ்பர எதிர்பார்ப்பு (7:1உ) | - பரஸ்பர எதிர்பார்ப்பு (உ:8) |
| 5. கனி கொடுப்பது (7:16) | - கனி கொடுப்பது (3:1உ) |
| 6. சமாதானம் (5:9) | - சமாதானம் (3:18) |

சிறுவர் பகுதி

## எப்படி ஆதாம் எல்லா மிருகங்களுக்கும் ஒரே நாளில் பெயரிட்டிருப்பான்?

தேவனுடைய உன்னதமான நாமத்திற்கு கனமும் மகிமையும் உண்டாவதாக. சிறுபிள்ளைகளாகிய உங்களை இந்த மாதமும் இவ்விதழின் மூலம் சந்திப்பதில் எனக்கு மகிழ்ச்சி. இன்னும் ஒரு மாதம் தான் மீதி இருக்கிறதென்ற கவலை கலந்த சந்தோஷத்தோடு நாட்களை கழித்துக் கொண்டிருக்கிறீர்களா? சரி உங்கள் நேரத்தில் கொஞ்சம் தேவனுக்காக பயன்படுத்துங்கள். தேவன் உங்கள் மீது மிகவும் அன்பாயிருப்பார்.

சரி, இந்த மாதம் நம்முடைய பாடம் என்ன? எங்கிருந்து, எதிலிருந்து கற்றுக் கொள்ளப் போகிறோம் தெரியுமா? சிருஷ்டிப்பின் சம்பவத்திலிருந்து என்ன பாடம்? நம்முடைய பாடமே ஒரு கேள்வியிலிருந்துதான். குதர்க்கமாக இந்த கேள்வியை உங்களுடைய நண்பர்கள் பலர் கேட்பதற்கு வாய்ப்புகள் இருக்கிறது. மேலே தலைப்பாக இருப்பது தான் அந்த கேள்வி.

இது ஒரு பாடமாக மட்டுமல்லாமல், உங்களிடம் யாராவது இதைக் கேட்கும் பொழுதோ பதிலாக சொல்வதற்கும் அல்லது நீங்களாகவே மற்றவர்களுக்கு சொல்ல பேருதவியாய் இருக்கும்.

ஒரு நாள் அதாவது 24 மணி நேரத்தில், 86,400 நொடிகளில் இதற்கு முன் பார்க்காத மிருகங்களை பார்த்து, ஒவ்வொன்றிற்க்கும் எப்படி பெயரிட்டிருக்க முடியும்? முடியாதது தானே? வேதமும் அதைத்தான் சொல்கிறது. எப்படி? தொடர்ந்து படியுங்கள்.

ஆதாம் ஒவ்வொரு மிருகமாக தேடி சென்று அவைகளுக்கு பெயர்களையிட்டான் என்பது உண்மையல்ல. மாறாக, ஆதி. 2:19-ல் தேவன் ஆதாமிடம் மிருகங்களை கொண்டு வந்தார் என்று பார்க்கிறோம். இதனால் ஆதாமிற்கு வேலை சுலபமாய் அமைந்திருக்கும்.

ஆதி 2:19ல் ஆதாம் எல்லா மிருகங்களுக்கும் பெயரிட்டான் என்று கூறவில்லை. வசனம் வெளியின் சகலவித மிருகங்களுக்கும், பறவைகளுக்கும் பெயரிட்டான் என்று சொல்கிறது. இதிலிருந்து விலக்கப்பட்டவைகள் கடல் பிராணிகள், ஊர்வன என்பவைகள் (ஆதி. 1:21,25).

ஆதாமிடம் தேவன் கொண்டு வந்த மிருகங்கள், "வெளியின்" மிருகங்கள் என்று கூறப்பட்டுள்ளது. (ஆதி 2:19). வெளியின் என்று சொல்லும் போது அது ஏதேன் தோட்டத்தை மட்டுமே உள்ளடக்கியிருக்கிறது.

மிருகங்கள் வெளியின் மிருகங்களானால் அதாவது ஏதேன் தோட்டத்திற்கு உட்பட்டவைகளானால், ஆதாமால் பெயரிடப்

பட்ட மற்ற பறவைகள், காட்டு மிருகங்கள் இவைகளும் ஏதேன் தோட்டத்திற்கு உட்பட்டவைகளாக இருப்பதற்கே வாய்ப்புக்கள் உள்ளன. ஏனென்றால், படைக்கப்பட்ட எல்லா மிருகங்களும் ஏதேன் என்ற ஒரு இடத்தில் மட்டும் பரவி இருக்க முடியாது.

ஆதி 1ல் நாம் பார்க்கும் போது, ஒவ்வொன்றையும் ஜாதி ஜாதிகளாக தேவன் படைத்தார். அவைகளை இனமாகவோ, வகையாகவோ படைக்கவில்லை. ஆக, ஜாதிகள் என்பது ஒரு பெரிய அளவிலான மிருகங்களை உள்ளடக்கினது. ஆதாம் நாய், ஆமை, மீன் என்று பெயரிட்டிருப்பானே தவிர ராஜபாளைய நாய், டாபர்மேன், ஜெர்மன் ஷெபர்ட் என்று பெயரிட்டிருக்க மாட்டான்.

ஆக, ஆதாம் ஆறாம் நாளில் பெயரிட்ட விஷயம் நாம் நினைக்கின்ற அளவிற்கு ஒரு பெரிய வேளை இல்லை. வசனத்தை கவனமாக படிக்க வேண்டியதன் கட்டாயமும், தற்போதைய அறிவியல் தகவல்களை இதில் சேர்க்க கூடாத ஒரு காரியத்தையும் இதிலிருந்து நாம் கற்றுக் கொள்கிறோம்.

நம்முடைய அறிவை வேதாகமத்தில் பயன்படுத்தக் கூடாது மாறாக தேவன் என்ன சொல்கிறாரோ அதை அப்படியே ஏற்றுக் கொண்டால் நமக்கு வேதாகமத்தின் அநேக காரியங்கள் சுலபமாக புரிந்து விடும்.

இனி, உங்கள் நண்பர்கள் இந்த கேள்வியை கேட்டால் இந்த விதமாக பதில் சொல்லி தேவனுடைய நாமத்தை மகிமைப் படுத்துங்கள். தேவன் உங்களை ஆசீர்வதிப்பார்.

**R. ஏபில் R. நாயகம்**

## ஆரோனும், கிறிஸ்துவும் ஒரு ஒப்பீடு

| ஆரோன் | கிறிஸ்து |
|---|---|
| 1. லேவி கோத்திரத்தைச் சேர்ந்தவன் [லேவி.8:6,7] | யூதா கோத்திரத்தைச் சேர்ந்தவர் [எபி. 7:14] |
| 2. ஆரோனின் ஆசாரியத்துவத்தைச் சார்ந்தவன் [லேவி. 8 அதி] | மெல்கிசேதேக்கின் முறைமையின் படி ஆசாரியன் [எபி.6:20] |
| 3. தன் ஜனங்களுக்காக பலிகளைச் செலுத்துவான் [லேவி. 9:15 - 17] | தன்னையே மக்களுக்காக ஜீவபலியாக கொடுத்தார் [யோவா 10:14 18] |
| 4. வருடத்திற்கு ஒரு முறை பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசித்தான் [லேவி. 16:1 7] | ஒரே முறை பரலோகத்திற்குள்ளே பிரவேசித்திருக்கிறார் [எபி. 9:25-29] |

# விசுவாசத்தின் அடிப்படைகள்

கிறிஸ்துவின் சபையில் அங்கத்தினராக இருப்பதோடு சம்பந்தப்படுத்தப்பட்டிருக்கிற காரியங்களை நாம் படித்துக் கொண்டிருக்கிறோம். அவைகளுள் ஒன்று முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் நமக்கு அளித்திருக்கிற அருமையான மாதிரியை பின்பற்றுவதாகும். தேவன், லூக்கா மூலமாக அந்த ஆதிக்கிறிஸ் தவர்கள் எப்படி வாழ்ந்தார்கள், எப்படி போதித்தார்கள் என்பது சம்பந்தமான அநேக உதாரணங்களை அப்போஸ்தலருடைய நடபடிகள் புஸ்தகத்தில் பதிவு செய்திருக்கிறார். நமக்கு தூண்டு கோலாக இருக்க கூடிய அவர்களுடைய ஆச்சரியமான அந்த மாதிரியை நாம் தொடர்ந்து விவரமாக ஆராய்வோம்.

*அப். 8:5யை* நாம் வாசிக்கும்போது இங்கே தேவன் அப் 6:5ல் பட்டியலிடப்பட்டிருக்கிற ஏழு உண்மையுள்ள சகோதரர் களுள் ஒருவரான பிலிப்புவை பற்றி இங்கே விவரிக்கிறார். பிலிப்பு என்ன செய்தார்? அவர் சமாரியாவுக்கு சென்றார். பிலிப்பு அங்கே என்ன செய்தார்? அவர் அங்கே ஜனங்களுக்கு கிறிஸ்து வை பிரசங்கித்தார்.

மறுபடியும் நாம் தேவனுடைய வார்த்தை, விசுவாசம், அன்பு, தைரியம் ஆகியவைகள் ஒருவனுடைய இருதயத்தில் நிறைந்து காணப்பட்டால் அதனுடைய விளைவு என்னவாய் இருக்கும் என்பதனை நாம் காண்கிறோம். விளைவு என்னவா யிருந்தது? பிலிப்பு ஜனங்கள் இடத்தில் இயேசுவை தைரியமாக பிரசங்கித்தார். எரேமியாவைப் போல் தேவனுடைய வார்த்தை பிலிப்புவின் எலும்புகளில் அடைபட்டு எரிகிற அக்கினியைப்போல் அவருடைய இருதயத்தில் இருந்தது. (எரேமியா 20:9). பிரியமானவர்களே, இன்றைய நாட்களில் இந்த பிலிப்புவை போல அநேக கிறிஸ்தவர்கள் தேவைப்படுகிறார்கள்! அவர்களுள் ஒருவராக நீங்கள் இருக்கிறீர்களா?.

*அப் 8:39யை* வாசியுங்கள் 34-38 வசனங்களின்படி பிலிப்பு கிறிஸ்துவை எத்தியோப்பிய மந்திரிக்கு அறிவித்தார். நாம் ஏற்கனவே படித்தபடி கிறிஸ்துவைப் பிரசங்கிப்பது என்பது தண்ணீர் - ஞானஸ்நானத்தைப் பற்றி துல்லியமாக அவர்களுக்கு பிரசங்கிப்பதையும் ஈடுபடுத்துகிறது.

எத்தியோப்பிய மந்திரி தான் ஞானஸ்நானம் பெற விரும்பு வதை பிலிப்புவுக்கு தெரிவித்த போது இருவரும் தண்ணீரில் இறங்கினார்கள். பிலிப்பு எத்தியோப்பிய மந்திரிக்கு ஞானஸ் நானம் கொடுத்தார்.

ஞானஸ்நானம் பெற்ற பிறகு எத்தியோப்பிய மந்திரி என்ன செய்தான்? சந்தோஷத்தோடே தன் வழியே போனான். ஏன் மந்திரி சந்தோஷப்பட்டான்? தன்னுடைய கடந்த பாவங்கள் இயேசுவின் இரத்தத்தினாலே கழுவப்பட்டுவிட்டது என்பதை அந்த மந்திரி அறிந்ததினாலே சந்தோஷப்பட்டார். (அப். 1:5, அப். 22:16). பிலிப்பு இயேசுவை எத்தியோப்பிய மந்திரிக்கு பிரசங் கித்த போது தெளிவாக அதை பிரசங்கித்தார்.

பிரியமானவர்களே, இப்படிப்பட்ட சந்தோஷத்தினால் நிறைந்து காணப்படுகின்ற உண்மையுள்ள கிறிஸ்தவர்கள் தேவைப்படுகிறார்கள். இயேசுவின் இரத்தத்தினாலே நம்முடைய பாவங்கள் கழுவப்பட்டு விட்டது என்பதை அறிந்து கொள்ளும் சந்தோஷம், இந்த சந்தோஷத்தினால் நிறையப்பட்ட கிறிஸ்தவர் கள் அநேகர் தேவைப்படுகிறார்கள். அதோடுகூட தன்னுடைய விலையேறப்பெற்ற இரத்தத்தை அந்த கோரக் குருசில் சிந்திய இயேசுவை பின்பற்றுவதினால் ஏற்படும் சந்தோஷத்தினால் நிறைந்து காணப்படுகின்ற கிறிஸ்தவர்கள் தேவைப்படுகிறார் கள்.

நாம் ஒவ்வொருவரும் இரட்சிப்பின் சந்தோஷத்தை திரும்பப் பெற்றுக்கொள்வது அவசியமாயிருக்கிறது (சங்கீதம் 51:12) நாம் கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருக்க வேண்டும் (பிலிப்பியர் 4:4) நம்மில் அநேகர் அனுதினமும் இப்படியாக செய்யும் போது, கிறிஸ்துவின் சபைக்கு வெளியே இருப்பவர்கள் நம்முடைய சந்தோஷத்தைப் பார்த்து குமார னாகிய இயேசு கிறிஸ்துவின் சிலுவை மூலமாக பிதாவினிடத்தில் அநேகர் இழுக்கப்படும் பொழுது நாம் இருக்கின்ற சபை மிகப் பெரிய வளர்ச்சியடையும்.

*அப். 11:26யை* நாம் வாசிக்கும் போது அந்தியோகி யாவில் கிறிஸ்துவை பின்பற்றின சீஷர்கள் முதன் முதலாக கிறிஸ் தவர்கள் என்றழைக்கப்பட்டனர். பிரியமானவர்களே, அந்த சீஷர்கள் தென்னிந்திய திருச்சபை கிறிஸ்தவர்கள் என்று அழைக் கப்படவில்லை, பெந்தெகொஸ்தே கிறிஸ்தவர்கள் என்றோ, கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் என்றோ அவர்கள் அழைக்கப் படவில்லை. அவர்கள் கிறிஸ்தவர்கள் என்றே அழைக்கப்பட் டார்கள்! ஏன்? ஏனென்றால், அப்பொழுது ஒரே ஒரு சபை தான் இருந்தது. அதுதான் கிறிஸ்துவின் சபை தென்னிந்திய திருச் சபை யோ, பெந்தெகொஸ்தே சபையோ, கத்தோலிக்க சபையோ அல்லது மனிதர்களால் ஸ்தாபிக்கப்பட்ட வேறு சபைகளோ அப்போது இல்லை. தெளிவாகவே, கிறிஸ்துவை உண்மையாக பின்பற்றுகின்ற ஒவ்வொருவரும் கிறிஸ்தவன் என்று தான் தன்னை அழைத்துக் கொள்ள வேண்டும், பெந்தகொஸ்தே சபை யைச் சார்ந்தவன் என்றோ, கத்தோலிக்க சபையை சார்ந்தவன் என்றோ, மெதடிஸ்ட் சபையைச் சார்ந்தவன் என்றோ, பெப்டிஸ்ட் சபையை சார்ந்தவன் என்றோ அழைக்கக்கூடாது.

அப். 11:27-30 வசனங்களை நாம் வாசிக்கும் போது தீர்க்கதரிசிகள் எருசலேமிலிருந்து அந்தியோகியாவிற்கு வந்த தாக நாம் வாசிக்கிறோம். அவர்களுள் அகபு என்பவன் ஒருவ னாயிருந்தான். அவன் உலக முழுவதும் கொடிய பஞ்சம் இருக் கும் என தீர்க்கதரிசனம் உரைத்தான். சீஷர்கள் என்ன செய்வதற் காக தீர்மானத்தார்கள்? ஒவ்வொருவரும் தங்கள் திரணிக்குத்தக்க தாக யூதேயாவில் கிறிஸ்துவுக்குள் இருந்த தங்கள் சகோதர, சகோதரிகளுக்காக உதவித் தொகையை அனுப்பத் தீர்மானித் தார்கள்.

மறுபடியும், ஆதிக்கிறிஸ்தவர்கள் ஒருவர் மீது ஒருவர் கொண்டிருந்த மிகப்பெரிய அன்பை நாம் இங்கே காண்கிறோம். சக கிறிஸ்தவர்கள் தேவையில் இருந்ததை கவனித்த ஆதிக் கிறிஸ்தவர்கள் தங்களால் முடிந்த வரை தேவையில் இருந்தோ ருக்கு உதவி செய்தார்கள். அந்த அருமையான மாதிரியை நாம் பின்பற்ற வேண்டும்!.

அப். 12:1-5,12 வசனங்களை நாம் வாசிக்கும் போது துன்மார்க்கமான ராஜாவாகிய ஏரோது கிறிஸ்தவர்களை துன்பப் படுத்தும்படி தன் கையை நீட்டினார். கிறிஸ்துவை பின்பற்றின வர்களை எந்த அளவுக்கு துன்பப்படுத்தினான்? யோவானின் சகோதரனாகிய யாக்கோப்பை பட்டயத்தினாலே கொன்று போட் டான். ஏரோது பேதுருவையும் கைது செய்து சிறையில் அடைத் தான்.

இப்படிப்பட்ட துன்மார்க்கமான சம்பவங்கள் மற்ற கிறிஸ்தவர்களின் இருதயத்தில் எப்படிப்பட்ட பயத்தை ஏற்படுத் தியிருக்கும்? இத்தகைய சூழ்நிலைகளில் நீங்கள் என்ன செய்தி ருப்பீர்கள்? ஆதிக்கிறிஸ்தவர்கள் என்ன செய்தார்கள்? சபை யானது தங்களுடைய பிரியமான சகோதரர் பேதுருவுக்காக தொடர்ந்து ஜெபித்துக் கொண்டிருந்தது. மாற்கு என்னும் பேர் கொண்ட யோவானுடைய தாயாகிய மரியாள் வீட்டில் சபையார் ஒன்றுகூடி ஜெபம் பண்ணிக்கொண்டிருந்தார்கள். இந்தக் கிறிஸ்த வர்கள் தேவன் மீது முழுமையான நம்பிக்கை வைத்து, தேவனு டைய உதவி தங்களுக்கு தேவை என்பதை உணர்ந்து, பேதுரு வுக்காக தொடர்ந்து ஜெபம் பண்ணினார்கள். உண்மையாகவே, ஜெபத்தின் வல்லமையை அவர்கள் நம்பினார்கள். சிறையிலி ருந்த தன்னுடைய பிரியமான சகோதரனை ஆயுதங்களைக் கொண்டு வெளியில் கொண்டுவர எந்த முயற்சியும் எடுக்காமல் தேவனை நோக்கி ஜெபித்தது நீங்களும், நானும் பின்பற்ற எவ்வளவு அருமையான மாதிரி!

அப் 12:24 ஒரு சிறிய வாக்கியமாக இருந்தாலும் அது மிகவும் வல்லமை வாய்ந்த ஒரு வசனப்பகுதியாகும். தேவ வசனம் வளர்ந்து பெருகிற்று. அதாவது அது நாளுக்கு நாள் பரவியது. எப்படி? நாம் ஏற்கனவே பார்த்திருக்கிறபடி அந்த

கிறிஸ்தவர்கள் தேவனுடைய வார்த்தைகளை போதித்தவர்களாய் எங்கும் சுற்றித்திரிந்தார்கள். அவர்கள் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தை பிரசங்கிக்க வேண்டும், சகல ஜாதிகளையும் சீஷராக்க வேண்டும் என்கின்ற இயேசுவின் கட்டளையை நிறைவேற்றுவதில் மிகுந்த பக்தி வைராக்கியமுள்ளவர்களாயிருந்தார்கள். நீங்கள் இவ்விதமாக விவரிக்கப்பட்டால் எப்படி இருக்கும்? நான் இவ்விதமாக விவரிக்கப்பட்டால் எப்படி இருக்கும்? இவ்விதமான பக்தி வைராக்கியத்தால் நிரப்பப்பட்ட அநேக கிறிஸ்தவர்கள் இன்றைய நாட்களில் அவசியப்படுகிறார்கள். இப்படிப்பட்டவர்கள் தேவனுடைய வார்த்தையை போதிக்கும் போது தேவ வசனம் வளர்ந்து பெருகும்.

அப் 13:26,38 வசனங்களை நாம் வாசிக்கும்போது அந்த ஆதிக்கிறிஸ்தவர்களுடைய செய்தியின் சாரம்சத்தை கவனியுங்கள். முதலாவது அவர்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றி பிரசங்கித்து இருக்கிறார்கள். சிலுவையில் அறையப்பட்ட இயேசுவைக் குறித்து பிரசங்கிக்க அதிக ஆவல் அவர்களிடத்தில் இருந்திருக்கிறது. (1 கொரிந்தியர் 2:2) அவர்கள் அப்படி செய்ததன் காரணம் என்னவென்றால் சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைப் பற்றிய செய்தி தேவ பெலனும் தேவ ஞானமுமாயிருக்கிறது (கொரி 1:23,24) இரண்டாவது, அவர்கள் இரட்சிப்பின் வார்த்தையையும், பாவமன்னிப்பையும் பற்றி பிரசங்கித்தார்கள். இயேசுவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினால் மாத்திரமே ஒருவருடைய பாவங்கள் கழுவப்பட்டு மன்னிக்கப்படும் (எபேசியர் 1:7; வெளி 1:5). நம்முடைய விசுவாசமானது நாம் ஞானஸ்நானம் பெறத்தக்கதாக நம்மைத் தூண்டும் போது அந்த ஞானஸ்நானத்திலே நம்முடைய பாவங்கள் கழுவி சுத்திகரிக்கப்படுகிறது.

(அப் 22:16; கொலோ 2:12,13) ஆத்துமாவை உருவக் குத்துகின்ற இயேசுவைப்பற்றிய செய்தியை நாம் அறிந்தவர்களுக்கெல்லாம் எடுத்துச் செல்லும் போது அவர்கள் அதற்கு கீழ்ப்படிவதனால் தேவன் இயேசுவுக்குள் வைத்திருக்கிற சகல ஆவிக்குரிய ஆசீர்வாதங்களையும் சுதந்தரித்துக் கொள்வார்கள் (எபேசியர் 1:3).

அப் 14:19-22 வசனங்களில் அந்தியோகியாவிலும், இக்கோனியாவிலும் உள்ள யூதர்கள் பவுலை கல்லெறிந்து அவர் மரித்துவிட்டார் என்று நினைத்து அவரை பட்டணத்துக்கு வெளியே இழுத்துக்கொண்டு போய் போட்டார்கள். ஆனால், பவுல் மறுநாள் எழுந்து பர்னபாவோடு தெர்பே, லீஸ்த்ரா, இக்கோனியா, அந்தியோகியா போன்ற பட்டணங்களுக்குச் சென்றார். அந்தப் பட்டணங்களில் அவர்கள் என்ன செய்தார்கள்?.

நம்மை பக்தி விருத்தியடையச் செய்ய வல்லமையுள்ளதும், இரட்சிப்பு உண்டாவதற்கு தேவ பெலனாயிருக்கிற கிறிஸ்துவின் சுவிசேஷத்தை பிரசங்கிப்பதன் மூலமாக சீஷர்களின் மனதைத் திடப்படுத்தினார்கள் (ரோமர் 1:16; அப். 20:32).

பவுலும், பர்பனபாவும் பிரசங்கித்தது இவ்வளவுதானா? இல்லை! சீஷர்கள் கிறிஸ்துவின் சுவிசேஷமாகிய விசுவாசத்தில் நிலைத்தி ருக்கும்படி அவர்களுக்கு புத்திமதி கூறினார்கள். அதாவது, நம்முடைய அன்புள்ள எஜமானாகிய இயேசுவின் உண்மையான ஊழியக்காரர்கள் இயேசுவை பின்பற்றுபவர்களை இந்த உலகத் தில் எந்த ஒரு மனிதனோ, அல்லது மனுஷியோ என்ன நினைத்தாலும், என்ன செய்தாலும் புதிய ஏற்பாட்டின்படி வாழ புத்திமதிக் கூறினார்கள்!. உண்மையாகவே, நாம் சுவிசேஷத்தினால் உண்டா கும் நம்பிக்கையை விட்டு அசையாமல், ஸ்திரமாயும், உறுதியா யும், நிலைத்திருக்க வேண்டும். (கொலோ 1:22).

மூன்றாவது பவுலும், பர்னபாவும், நாம் அநேக உபத்திர வங்களின் வழியாய் தேவனுடைய இராஜ்ஜியத்தில் பிரவேசிக்க வேண்டுமென்று சொன்னார்கள். கிறிஸ்து இயேசுவுக்குள் தேவ பக்தியாய் நடக்க மனதாயிருக்கும் யாவரும் துன்பப்படுவார்கள் என்று தேவன் வாக்குத்தத்தம் செய்திருப்பது உண்மைதான். (2 தீமோத்தேயு 3:12). ஆனால், நாம் இப்படிப்பட்ட துன்பங்களை பாடுகளை தேவன் பேரில் ஆழமான விசுவாசத்தோடும், நம்பிக் கையோடும், இருந்து அவைகளை சகித்தால் நம்முடைய விசுவா சத்தின் பலனாகிய ஆத்துமரட்சிப்பை அடைவோம். (1 பேதுரு 1:6-9). நம்முடைய விசுவாசத்தோடு கிறிஸ்தவ பண்புகளை கூட்டு வதில் ஜாக்கிரதையாயிருந்து, அவைகள் நம்முடைய ஜீவியத் தில் பெருகுவதை நிச்சயப்படுத்திக் கொண்டு நாம் அழைக்கப் பட்ட அழைப்புக்கு பாத்திரவான்களாக நடந்து கொண்டு, நம்மு டைய அழைப்பையும், தெரிந்து கொள்ளுதலையும், உறுதியாக் கும்படி ஜாக்கிரதையாய் இருந்தால், நம்முடைய கர்த்தரும், இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய நித்திய இராஜ்ஜி யத்துக்குட்படும் பிரவேசம் நமக்கு பரிபூரணமாய் அளிக்கப் படும். (2பேதுரு 1:5-11).

பிரியமானவர்களே, அப்போஸ்தலருடைய புஸ்தகத்திலி ருந்து அந்த ஆதிக்கிறிஸ்தவர்களைப் பற்றி அநேக காரியங்களை கற்றுக்கொண்டு வருகிறீர்கள் என்று நான் முழு மனதோடு நம்புகிறேன். ஆனால், அதைவிட முக்கியமாக அவர்கள் இயேசு வுக்காக தங்களுடைய எல்லாவற்றையும் கொடுத்து, பாவத்தி னால் இழந்து போன இந்த உலகத்தின் மக்களுக்கு இயேசுவின் செய்தியை கொண்டுபோன அந்த ஆதிக்கிறிஸ்தவர்களின் மாதிரியை நாம் ஒவ்வொருவரும் பின்பற்ற வேண்டும் என ஊக்க மாக ஜெபித்துக்கொள்கிறேன்.

**BENNY MARTIN** **CHARLE DIPALMA**

# கிறிஸ்துவைப் பின்பற்ற நாம் எடுக்க வேண்டிய நம்முடைய சிலுவை!

## III. நம் சிலுவையும், பொருளாதாரமும் (தொடர்ச்சி)

பொருளாதார வசதியின்மை நாம் இயேசுவை பின்பற்ற சில நேரத்தில் தடையாய் இருப்பினும் பெரும்பாலும் வசதி அதிகம் இருப்பவர்கள் தான் இயேசுவை பின்பற்ற முடிவதில்லை. அதற்கு உதாரணம் இயேசுவினிடம் வந்த ஐசுவரியமான வாலிபன் துக்கத்தோடே திரும்பி போனது (மத்.19:22,23) காரணம், கிறிஸ்துவின் உபதேசப்படி ஏழைக்கு இரங்குகிறவனே அவரைப் பின்பற்ற முடியும். அதனால் தான் பெரும்பாலும் வசதிக்குறை வானவர்கள் சபைகளில் காணப்படுகிறார்கள். தரித்திரருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்படுகிறது என்று இயேசுவும் சொல்லி யிருக்கிறார் (மத் 11:5) அப்படிப்பட்ட ஜனங்கள் தான் சாப்பிட ஒன்றுமில்லாதிருக்கும் சூழ்நிலையிலும் இயேசுவின் பிரசங்கத்தை ஆவலாய் கேட்கக் கூடினார்கள். கிறிஸ்தவ வாழ்க்கை வாழ அதிக வசதிகள் தேவையில்லை என்பதே நடைமுறை உண்மையாகும். ஜீவனத்தின் பெருமை இந்த உலகத்தினால் உண்டானது பிதாவினால் அல்ல. ஆண்டவர் தம்மை சாந்தமும், மனத் தாழ்மையும் உள்ளவராய் அறிவித்து நம்மையும் அதுபோல வாழச் சொல்கின்றார். ஆனால் பொருளாதார வசதிகள் உள்ளவர்களுக்கு இக்குணங்கள் குறைவாகவே காணப்படுகிறது. இந்த குணம் இல்லாமல் நாம் தேவனிடம் சேர முடியாது என்பதே உண்மை. நம் நாட்டில் கிறிஸ்தவர்களை மதியாமைக்கு காரணம் கூட அதுவே காரணம். அவர்கள் கண்கள் கொழுப்பினால் எடுப்பாய் பார்க்கிறது சங் 73:7,12; கிறிஸ்து நம்மை, முதலாவது தேவ னுடைய ராஜ்ஜியத்தை தேடுங்கள் அப்போது உலகத் தேவைகள் சந்திக்கப்படும் என்கிறார். அப்போஸ்தலருடைய உபதேசமும், இருக்கிறவைகள் போதும் என்று (உண்ணவும், உடுக்கவும்) எண்ணுங்கள் என்று ஆலோசனைக் கூறுகிறது (1 தீமோ 6:6-10) மேலும், உலக ஜனங்கள் பணத்திற்காகவும் உலக வசதிகளுக்கா கவும் ஆசைப்பட்டு பிரயாசப்படுவதைப் போல, கிறிஸ்துவுக்குள் இருக்கும் நாமும் கூட நீதி, தேவபக்தி, விசுவாசம், அன்பு, பொறு மை, சாந்த குணம் போன்ற குணத்திற்காக ஆசைப்பட்டு அவை களை அடைய பிரயாசம் எடுக்க வேண்டும் (1 தீமே 6:11).

சரியான சத்தியத்தில் நடந்து கொள்ள முயற்சிக்கும் போதுதான் சோதனைகள் வரும்; வேறு நாமகரண கூட்டமாகிய சபைகளிலிருந்து பணம் கிடைக்க பிசாசானவன் வசதி செய்து தருவான். அப்படிப் பணத்துக்கு நாம் முக்கியத்துவம் கொடுக் கும் போது தேவனுக்கு ஊழியம் செய்ய முடியாது. (மத் 6:24). அப்போஸ்தலனாகிய பவுலும் பொருளாதாரக் கஷ்டங்களை அனுபவித்துள்ளார். எங்கள் சரீரத்திற்கு இளைப்பாறுதல் ஒன்றுமில்லாமல், எப்பக்கத்திலேயும் உபத்திரவப் பட்டோம், சிறுமைப் பட்டவர்களுக்கு ஆறுதல் செய்கிற தேவன் தீத்து வந்ததினாலே ஆறுதல் செய்தார் (2கொரி 7:5,6). மற்ற அப்போஸ்தலர்களும் அதுபோலவே பொருளாதார கஷ்டங்களை அனுபவித்துக் கொண்டு தான் கிறிஸ்துவுக்கு ஊழியம் செய்தனர். காரணம் இவ்வுலகம் பிசாசின் பிடியில் சிக்குண்டுக் கிடப்பதால் சத்தியம்

வளராமலிருக்க அவனாலான முயற்சிகளை அவனும் செய்து கொண்டிருக்கின்றான். எனினும் நல்ல போராட்டம் போராடினேன், விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன் என்று பவுல் கூறு வதைப் போல (2 தீமோ 4:7); நாமும் நம் விசுவாசத்தைக் காத்து கொள்ள போராட வேண்டும். அதே நேரத்தில் ஒருவன் இவ்வுலக ஆஸ்தி உடையவனாய் இருந்து, தன் சகோதரனுக்குக் குறைச்சலுண்டென்று கண்டு தன் இருதயத்தை அடைத்து கொண்டால் அவன் பக்தி வீணாயிருக்கும் (1யோவா 3:17, யாக் 1:27). என்று வசதி யானவர்களுக்கும் வேதம் ஆலோசனை சொல்கிறது. கிறிஸ்தவனுக்கு அவனுடைய பொருளாதாரக் குறைவு பல நேரங்களில் குடும்பத்தில் மனைவி, பிள்ளைகளிடத்தில் அவமரியாதையை உண்டாக்குகிறது, உறவினர்கள் மற்றும் சமுதாயத்திலும் கூட அவன் ஏளனமாக பார்க்கப்படுகிறான். ஆனால், நாம் அதைக் குறித்து கவலைப்படாமல், நாம் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள், மறுமைக்கு சொந்தக்காரர்கள் என்பதில் உறுதியாய் இருந்து ஆண்டவரைப் பின்பற்ற வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் நாம் சபைக் கூடுதலையும், விசுவாசத்தையும் விட்டு விடாமல் தேவ அன்பில் பெருக வேண்டும். உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு. ஆனாலும், திடன் கொள்ளுங்கள் நான் உலகத்தை ஜெயித்தேன் என்கிறார் இயேசு. நம்பிக்கையிலே சந்தோஷமும் உபத்திரவத்திலே பொறுமையும் ஜெபத்திலே உறுதியும் இருந்தால் நாம் நல்ல போராட்டம் போராடலாம். எனவே, நம் ஆண்டவர் வாழ்ந்து காண்பித்த சாந்தமும் மனத்தாழ்மையும் உள்ள வாழ்க்கையை தெரிந்து கொள்வோமாக. நம் தேவனும் ஏழைகளுக்கு இரங்குகின்ற திக்கற்றவர்களை போஷிக்கிற தேவனாயிருக்கின்றார் (சங் 72:12-14.)

## III. நம் சிலுவையும், பிசாசும் :

தேவனுக்கு மகிமைபோய் சேரக்கூடாது என்பது பிசாசின் குறிக்கோள்! ஆனால் உங்கள் நற்கிரியைகளினாலே பிதா மகிமைப்பட வேண்டும் மத் 5:16, என்ற ஜெபத்தைக் கற்றுக் கொடுக்கும் போது ராஜ்ஜியமும் வல்லமையும் மகிமையும் என்றென்றைக்கும் பிதாவினுடையவைகளே என்றும் நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதால் என் பிதா மகிமைப்படுவார் என்றும் இன்னும் அநேக ஆலோசனைகளை நம் ஆண்டவர் சொல்லி யிருக்கிறார். அப்போஸ்தலர் உபதேசப்படியும் நாம் எதைச் செய்தாலும் (பாடினாலும், ஜெபித்தாலும்) இயேசுவின் நாமத்தினால் செய்து அவர் முன்னிலையாகப் பிதாவாகிய தேவனை மகிமைப்படுத்த வேண்டும் (கொலே 3:17, எபேசி 5:20) பிசாசு வேதாகமத்தில் ஒரு வெளிப்படையான எதிரியாகவும் நடைமுறையில் ஒரு மறைமுக எதிராளியாகவும் கிரியை செய் கிறான். மனுஷரை தேவனிடம் சேர்க்க கிறிஸ்து பாடுபட்டார். பிசாசு தேவனிடமிருந்து பிரிக்கவே பாடுபடுகிறான். பரிசுத்த ஆவியானவரால் நமக்குக் கிடைக்கப்பெற்ற வசனங்களை நாம் அறியாதபடி, ஆராயாதபடிக்கு மனக்கண்களை குருடாக்கு கிறான் (2 கொரி 4:4). ஊழியர்களுக்கு உபத்திரவத்தைக் கொடுத்து தொடர்ந்து ஊழியம் நடைபெறாதபடி குடும்பத்தார், சபையாரை பயன்படுத்துபவனும் அவனே என்று பார்க்கிறோம். ரோமர் 1:13, 2தெச 2:18 உணவு, உடை, வீடு போன்ற அடிப்ப டைத் தேவைகளையும் ஊழியர் களுக்குக் கிடைக்கச் செய்யாமல் கைக் கொட்டிச் சிரிப்பவனும் அவனே, கிறிஸ்து எதிர்த்து நின்று அவனை விரட்டியது போலவே நாமும் அவனுக்கும் எதிர்த்து

நிற்போம் (யாக் 4:7) பிசாசு துரத்தப்பட்டபின்பு ஊமையன் பேசினான் என்ற வசனம் சத்தியம் தெரிந்தும் பேசாமல் இருக்கும் நம் சகோதர, சகோதரிகளை அசைக்க வேண்டும். பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெற்ற அப்போஸ்தலர்கள் பெரிய ஊழி யங்களை நிறைவேற்றியது போல, ஞானஸ்நானத்தின் போது பரிசுத்த ஆவி பெற்றுக் கொண்ட நாமும் நாம் கற்றுக்கொண்ட உபதேசத்தை மற்றவர்களுக்கு அறிவிக்க வேண்டும். (மத் 10:32, 1பேது 3:15) அதே போல பிசாசு நீங்கின மனுஷன் நல்ல வஸ்திரம் தரித்து இயேசுவண்டை அமர்ந்து கொண்டான். இதிலிருந்து ஒழுங்கான வஸ்திரம் தரியாத வாலிப பெண்களும், வாலிபரும் பிசாசின் மறைமுக ஆளுகைக்கு உட்படுகிறார்கள் என்பதை அறிகி றோம் (1தீமே 2:10) மேலும் அனனியா, சப்பிராளை போல பொய் சொல்ல தூண்டுவதும் படை பெலத்தை எண்ணத் தூண்டிய தாவீதைப் போல மேட்டிமை அடையச் செய்வதும் (2 சாமு 24:1) குற்றமில்லாதவரை காட்டிக் கொடுத்த யூதாசை போல கெட்டுப்போகச் செய்வதும் ஆகானைப் போல திருடி மறைப்பதும் (யோசு 7:1) மற்றும் நெடுநாள் கோபம், கெட்ட வார்த்தை உபயோகித்தல் அனைத்துமே பிசாசின் வேலை தான் (எபேசி 4:25-27) இப்படிப்பட்ட குணங்களை நம்மில் இருந்து வெளியேற்றி பரிசுத்தமாய் தேவனுக்கு பிரியமாய் வாழ முயற்சிப்பதே பிசாசை எதிர்ப்பதும் நம்முடைய சிலுவையை சுமந்து, இயேசுவைப் பின்பற்றுவதைக் குறிக்கிறது. இவ்வாறு நாம் வாழவே சபை கூடுதல் என்னும் அற்புத திட்டத்தை தேவன் ஏற்படுத்தியுள்ளார் (எபி. 10:24,25) கூடி வரும் ஒவ்வொரு வரும் பிசாசை மடங்கடிக் கிறார்கள் என்பதை நாம் மறந்து விடக் கூடாது. நம் சபை கூடுதல் தடைபடின் தண்ணீரில்லா பூச்செடியைப் போல வாடி நம் ஆத்துமா மடிந்து விடும் என்று இயேசு எச்சரிக்கின்றார் (யோவா 6:53) வேதத்தில் இல்லாத செய்திகளை நம்புவதுகளை விதைக்கின்ற சத்துரு செய்கிற வேலையாகும் (மத். 13:39)

பிசாசின் திருவிளையாடல்களில் மிக முக்கியமானது கிறிஸ்து கட்டிய சபையை பற்றியும் அதில் கைக்கொள்ள வேண்டிய அப்போஸ்தலர் உபதேசத்தையும் பற்றி தெளிவில்லாமல் இருப்பதாகும். இன்றைக்கு சபைகள் எண்ணிக்கையில் பெருகியும், தேவனை வணங்காமல் மற்ற யாவற்றையும் சபையில் மகிமைப்படுத்துவது வேடிக்கையும் வேதனையும் ஆனது. கிறிஸ் துவின் உபதேசத்தில் இருக்கிறேன் என்று சொல்லிக் கொண்டே பாவத்தில் தொடர்ந்து வாழ்வதும் பிசாசின் வேலை (1யோவா 3:8) அவன் மனுஷரை வஞ்சித்து மயக்கி தேவனிடமிருந்து பிரிக்கிற வனாயிருக்கிறான் (கலாத் 3:1) நிறைவாக நாம் இவ்வுலகில் சுவிசேஷம் பரவவும் அவிசுவாசிகளால் ஊழியம் தடைபடாத படிக்கும், சபை மக்கள் தேவனுக்குச் சித்தமானவற்றில் தேறவும் ஜெபத்தில் போராட வேண்டியுள்ளது (கொலோ 4:11) ஆகவே, நாம் நமக்கு ஒப்புவிக்கப்பட்ட உபதேச சட்டத்திற்கு மனப்பூர்வமாக கீழ்ப்படிந்து தைரியத்தோடு விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடி நமது சிலுவையைக் கண்டு திகைக்காமல், சோர்ந்து போகாமல் நம்பிக்கையோடு அதை எடுத்துக் கொண்டு கிறிஸ்துவைப் பின்பற்ற தேவன் தாமே இயேசுவின் நாமத்தில் நமக்கு அனுக்கிரகம் செய்வாராக! ஆமென்.

**சகோ. K. பாண்டியன்**

பாண்டிச்சேரி.

# இரத்த சாட்சிகள்

தொடர் கட்டுரை

## PART II பாடம் - 2. பவுலின் தோற்றமும், இரட்சிக்கப்பட்ட விதமும்

**I. பவுலின் தோற்றம் :**

அப்போஸ்தலனாகிய பவுலின் தோற்றத்தைக் குறித்து பவுல், தெக்லா என்பவர்களின் நடபடிகள்" **(Apocryphal Acts of Paul and Thecla)** இரண்டாம் நூற்றாண்டு நூலில் பவுலின் சரீர தோற்றத்தைப் பற்றி உள்ளது. அதாவது அவர் ஒரு குட்டையான மனிதரென்றும் அவரது புருவங்கள் ஒன்றோடொன்று சேர்ந்தவை என்றும், பெரிய மூக்கும், வழுக்குத்தலையும், வளைந்த கால்களை யுமுடையவர் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் அவர் நல்ல திடமான உடற்கட்டும் கொண்டவராக இருந்தார் என்றும் அவரது பேச்சு அநேகருக்கு ஆச்சரியமூட்டும் வகையில் இருந்த படியால் அவரது பேச்சை தேவ தூதருக்கு ஒப்பிட்டனர். ஆனால், அவரது தோற்றம் தேவ தூதருக்கு ஒப்பாக இல்லை என்றும் பார்வைக்கு புகழப்படத்தக்கத் தோற்றமில்லாதவர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அப்போஸ்தலனான பவுல் கிறிஸ்துவுக்காக பல இன்னல்களுக்குண்டானபடியால் அவரது சரீரத்தில் தழும்புகள் அவரில் காணப்பட்டது. அவற்றைக் குறித்து பவுல் அநேகரிடத்தில் இது இயேசு கிறிஸ்துவின் அச்சடையாளங்கள் என்று பெருமையாகப் பேசுவாராம். (2 கொரி 4:10,11).

அருமையானவர்களே, பவுலின் பெருமையைக் கவனித்தீர்களா? இயேசுக்கிறிஸ்துவுக்காகப் பட்ட பாடுகள், துன்பங்கள் எல்லாம் அவரது சரீரத்தில் தழும்புகளாகக் காணப்பட்டதை பெருமையாகப் பேசுகிறார்! ஆனால் நாம்? நமது ஆடம்பர வாழ்க்கையைக் குறித்தும், வீட்டைக் குறித்தும் பட்டங்களைக் குறித்தும், பதவிகளைக் குறித்தும் அல்லவோ பெருமையாகப் பேசுகிறோம்! யாக்கோபு கூறுவதைக் கவனியுங்கள் அப்படியே நாவானதும் சிறிய அவயமாயிருந்தும் பெருமையானவைகளைப் பேசும் (யாக் 3:5) நாம் இனிமேலாவது கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்தும் அவரது சிலுவையைக் குறித்தும் மேன்மை பாராட்ட எண்ணுவோம். மேன்மை பாராட்டுகிறவன் கர்த்தரைக் குறித்தே மேன்மை பாராட்டக்கடவன் தன்னைத்தான் புகழுகிறவன் உத்தமனல்ல கர்த்தரால் புகழப்படுகிறவனே உத்தமன் (2 கொரி 10:17,18) நம்மிடம் கிறிஸ்துவின் அச்சடையாளங்கள் சுவிசேஷத்தைத் தவிர வேறென்ன இருக்க முடியும்?

**II. பவுல் இரட்சிக்கப்பட்ட விதம் :** எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும் சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும் அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார். (1தீமோ 2:4) எல்லாரும்

இரட்சிக்கப்பட வேண்டும் என்பதே தேவனுடைய விருப்பம். இரட்சிப்பு என்றால் காப்பாற்றப்படுதலாகும். அதாவது பாவத்தின் சம்பளம் மரணம் (ரோமர் 6:23) இந்த மரணத்தி லிருந்து காப்பாற்றப்பட வேண்டும் என்பது தேவனுடைய விருப்பமாகும். பாவமன்னிப்பாகிய இரட்சிப்பு கிறிஸ்துவுக்குள் அதாவது கிறிஸ்துவின் சுவிசேஷத்தில் உள்ளது. (லூக்கா 1:77; ரோ 1:16) இந்த கிறிஸ்துவின் சுவிசேஷத்தினாலே எல்லாரையும் தேவன் அழைக்கின்றார். (2 தெச 2:14) சுவிசேஷத்திற்கு கீழ்ப் படிகிற பொழுதுதான் இரட்சிக்கப்பட முடியும். கிழ்படிதலில் லாத விசுவாசம் வீண் (1கொரி 15:1-3).

இன்று அநேகர் சுவிசேஷத்திற்கு கீழ்படியாமல் அதாவது ஞானஸ்நானத்திற்குக் கீழ்ப்படியாமல் இரட்சிக்கப்பட்டு விட்டதாகக் கூறுகிறார்கள்! அது எப்படி என்று கேட்டால் இயேசு பவுலுக்கு தரிசனமாகி அவரை இரட்சித்து போல எனக்கும் தரிசனமாகி என்னை இரட்சித்தார் என்று கூறுகிறார்கள். அவர்கள் கூறுவது போல பவுல் தரிசனத்தினால் இரட்சிக்கப்பட்டாரா? அல்லது ஞானஸ்நானத்திற்கு கீழ்ப்படிந்ததினால் இரட்சிக்கப் பட்டாரா? என்பதை நாம் கவனிப்போம்.

அப். 9:1-18 வசனப்பகுதியில் இயேசு பவுலுக்கு தரிசன மான நிகழ்ச்சி சொல்லப்படுகிறது. அதில் சவுல் என்பவன் இன்னுங் கர்த்தருடைய சீஷரைப்பயமுறுத்திக் கொலை செய்யும் படி சீறி பிரதான ஆசாரியரிடத்திற்கு போய் நிரூபங்களைக் கேட்டு வாங்கினான். அவன் எருசலேமிலிருந்து வடகிழக்கு திசையில் சுமார் 140 மைல் தூரத்திலிருந்த ஏராளமான மக்கள் தொகை கொண்ட பட்டணம் தமஸ்குவிற்கு சென்றான். தமஸ்கு வுக்கு சமீபித்தபோது அன்று அது மத்தியான வேலையாயிருந் தது. சூரியன் எரிக்கும் வெய்யிலைக் கடுமையாக்கிக் கொண்டி ருந்தது. அப்பொழுது சடுதியிலே வானத்திலிருந்து ஒரு ஒளி அவனைச் சுற்றிலும் பிரகாசித்தது. சூரியனைக் காட்டிலும் பிரகாசமான ஒளி அந்த பிரகாசமான ஒளியின் மூலமாக அவன் இரட்சிக்கப்படவில்லை! (அப் 9:3) அப்பொழுது அவன் தரை யிலே விழுந்தான். அப்பொழுது எபிரெய பாஷையிலே சவுலே, சவுலே நீ என்னை ஏன் துன்பப்படுத்துகிறாய் என்று தன்னுடனே சொல்லுகிற ஒரு சத்தத்தைக் கேட்டான். அப்பொழுதும் இரட்சிக் கப்படவில்லை (அப். 9:4) இந்த சத்தமும், இந்தக் காட்சியும் பரலோகத்திலிருந்து வந்தது. பரலோகத்திலிருந்து வந்த தரிசனத் தின் மூலமாக சவுல் இரட்சிக்கப்படவில்லை என்பதை கவனிக் கவும். இந்த தரிசனத்தைக் கண்ட சவுல் பயத்துடன் ஆண்டவரே நீர் யார் என்றான் அதற்கு கர்த்தர் நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே என்று பதில் திரும்ப வந்த பொழுதும் சவுல் பாவமன்னிப் பாகிய இரட்சிப்பு பெறவில்லை. (அப். 9:5) அவன் நடுங்கித் திகைத்து ஆண்டவரே நான் என்ன செய்ய சித்தமாயிருக்கிறீர்? என்றான். இக்கேள்வியில் ஆண்டவமாரே இரட்சிக்கப்படுவ தற்கு நான் என்ன செய்ய வேண்டும்? என்பது போல இருக்கின் றது (அப். 16:30).

அதற்கு கர்த்தர் நீ எழுந்து பட்டணத்துக்குள்ளே போ நீ செய்ய வேண்டியது அங்கே உனக்குச் சொல்லப்படும் என்றார். இங்கே கவனிக்கவும் நீ எழுந்து பட்டணத்திற்குள்ளே போ நான் உன்னை இரட்சித்தேன் என்று சொல்லவில்லை மாறாக நீ செய்ய வேண்டியது அங்கே உனக்குச் சொல்லப்படும் என்று தான் உள்ளது. அன்பானவர்களே இங்கே இயேசு கிறிஸ்து சவுலிடம் மூன்று முறை பேசினார். சவுல் இயேசுவிடம் இரண்டு முறை பேசினார். ஆனால், சவுலாகிய பவுல் இரட்சிக்கப்படவில்லை! பின் எப்பொழுது இரட்சிக்கப்பட்டார்? நீ செய்ய வேண்டியது அங்கே உனக்குச் சொல்லப்படும். அதாவது இரட்சிப்பின் திட்டத்தை ஒரு பிரசங்கியார் மூலமாகத்தான் கேட்க வேண்டும் என்பதை இயேசு இந்த தரிசனத்தின் மூலமாக காட்டுகிறார். (ரோ 10:14-17) தரிசனத்தின் மூலமாக யாருக்கும் இரட்சிப்பை தேவன் கொடுப்பதில்லை. கிறிஸ்துவின் சுவிசேஷத்தை விசுவாசத்தின் அடிப்படையில் அதற்கு கீழ்ப்படியும் போது இரட்சிக்கிறார். (2 கொரி 5:6).

அப்போஸ்தலனாகிய பவுல் இரட்சிக்கப்பட்ட விதம் தரிசனத்தின் மூலமாக இல்லை. மேலும் இந்த தரிசனத்தின் போது சூரியனைக்காட்டிலும் பிரகாசமான ஒளியைக் கண்டவுடன் அவனின் கண்கள் இருளடைந்து பார்வையை இழந்தான். இன்று அநேகர் ஒளியைப் பார்த்ததாகக் கூறுகிறார்கள். ஆனால், எத்தனை நாள் பார்வையை இழந்து காணப்பட்டார்கள்? பவுல் மூன்று நாள் பார்வையில்லாதவனாகக் காணப்பட்டார் (அப். 9:9) மூன்று நாள் அப்பம் புசியாமலும், தண்ணீர் குடியாமலும் ஜெபம் செய்தார் அப்பொழுதும் அவன் இரட்சிக்கப்படவில்லை! அனனியா என்ற தேவதாசன் மூலமாகத் தேவனுடைய திருவாய் மொழியைக் கேட்டு, விசுவாசித்து, மனந்திரும்பி, இயேசுவை தேவனுடைய குமாரன் என்று அறிக்கையிட்டு பாவமன்னிப்புக் கென்று ஞானஸ்நானம் பெற்று இவ்விதமாக இரட்சிக்கப்பட்டார் (அப் 9:10-18; அப் 22:16).

**III. பவுலின் போதனையும் இரட்சிப்பின் திட்டம் :** பவுலின் போதனை புதிய ஏற்பாட்டில் அதிகமான இடங்களைப் பிடித்துள்ளது. பரிசுத்த ஆவியானவர் பவுலை வெகுவாகப் பயன்படுத்தியுள்ளார். ரோமர் புத்தகம் முதல் பிலேமோன் புத்தகம் வரை 13 புத்தகங்களை எழுதியுள்ளார். அவருடைய எழுத்துக்களில் பெரும்பாலும் இரட்சிப்பின் திட்டத்தை வெளிப்படுத்தியுள்ளார். இன்று இந்த இரட்சிப்பின் திட்டத்தின் மூலமாகத் தான் நம்மை இரட்சிக்கின்றார் பரலோகத்தின் தேவன்.

**இதோ பவுலின் போதனையில் இரட்சிப்பின் திட்டம் :**

1. சுவிசேஷத்தைக் கேள்விப்பட வேண்டும். (ரோமர் 10:14-17)
2. விசுவாசிக்க வேண்டும் (ரோ 10:9)
3. மனந்திரும்ப வேண்டும் (2 கொரி 7:9,10)
4. அறிக்கையிட வேண்டும் (ரோ 10:10)
5. ஞானஸ்நானம் பெற வேண்டும் (கொலோ 2:12)

(தொடரும்) **K. பாஸ்கர், சிறுமுகை**

முகாமில் ஆண்களுக்கான
சிறப்பு வகுப்பின் போது...



Men's Class



முகாமில் பெண்களுக்கான
சிறப்பு வகுப்பின் போது...

Ladies's Class



Young Men's Class

முகாமில் வாலிபர்களுக்கான
சிறப்பு வகுப்பின் போது...



முகாமில் வாலிப
பெண்களுக்கான
சிறப்பு வகுப்பின் போது...

Young Women's Class

Regd. News Paper RNI No. 47661/87 Postal Regn. No. Erode/ 26 /2009-2011
Posted at Erode HPO on 20/21 of Every Month

ஏலகிரி வேதாகம முகாமில் காலை தியான வேளையின் போது...




During morning devotion

முகாமில் பகல் நேர வகுப்பின் போது திரண்டிருந்தவர்கள்...



During Day class

முகாமில் தேநீர் இடைவேளையின் போது...



During Tea Break



Children Class

சிறுவர்களுக்கான சிறப்பு வகுப்பின் போது...

Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.
Editor: S. Rajanayagam.